
கவிஞர் கு. வீரா வின்

# “இரண்டாம் உயிர்...”

கவிதைத் தொகுதி



# இரண்டாம் உயிர்

## கு. வீரா

இரண்டாம் உயிர்
கவிதைத் தொகுப்பு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | கு.வீரா |
| பக்கங்கள் | : | 144 |
| முதற்பதிப்பு | : | ஜனவரி 2015 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| நூலழகு | : | வித்தியா.கு (நோபிள் பிரின்ரேர்ஸ்) |
| அச்சழகு | : | நோபிள் பிரின்ரேர்ஸ் |
| வெளியீடு | : | வர்ணம் கிரியேஷன்ஸ் |
| | | அளவெட்டி, யாழ்ப்பாணம். |

Irandaam Uyir
(Collection Of Poems)

| | | |
|---|---|---|
| Author | : | Ku. Veera |
| Pages | : | 144 |
| First Edition | : | January 2015 |
| Copy Right | : | Author |
| Printed by | : | Noble Printers - Jaffna |
| | | (nobleprinters@hotmail.com) |
| Layout & Design | : | Vidya.K (Noble printers) |
| Published by | : | Varnam Creations |
| | | Alaveddy - Jaffna |
| Email | : | Varnam@gmail.com |

வெளியீடு:
வர்ணம் கிரியேஷன்ஸ்

# வாழ்த்துவதில்...



விடியலுக்காய் விறைப்போடு இருந்தவன்
வலியோடு சொல் வரியை அடுக்கி
வடித்த கவிதைகளுக்கு இன்று விடுதலை...
இவன் மனக்கற்பனையின் இடப்பெயர்வால்
வளரட்டும் புகழ் வாழட்டும் தமிழ்...
ஜகத்தின் ஜதார்த்தத்தையும்
இயற்கை இறுமாப்பையும்
விஞ்ஞான விந்தையையும்
விரசமில்லா காதலையும் பிரசவித்து
விரியவிட்ட இவன் "இரண்டாம் உயிர்"
கவிதைக்கு மட்டுமல்ல இனிப்பிரசவிக்கும்
கற்பனைக்கும் என் ஆசிகள்.

"மந்திரக்கிரியா சுரபி"
**சிவஸ்ரீ குமார. சரவணபவ குருக்கள் (JP)**
இணுவில் கிழக்கு

# வரவேற்பதில்...

ஒவ்வொரு மனிதனுள்ளும் ஒரு கவிஞன் ஒளிந்துகொண்டும், ஒளிர்ந்துகொண்டும், இருக்கிறான். சிலவேளைகளில் காலம் அவனை அடையாளப்படுத்தி விடுகிறது. பலவேளைகளில் காலத்துடன் அவனும் காலமாகி விடுகிறான். தனக்குள்ளான கவிஞனை இனம்கண்டு கொள் பவன் காலத்தை ஆட்சி செய்யும் பெருங்கவிஞன் ஆகிவிடுகிறான். ஏனை யோர் காலத்தின் போக்குடன் தம்மை பிணைத்துக்கொண்டு அதன் ஆளுமைக்குள் ஆட்பட்டு அது வழங்கும் காலதேச வர்த்தமானங்களின் வெளியீட்டாளர்களாக அடையாளம் காட்டப்பட்டுவிடுகிறார்கள். இது ஒன் றும் அதிசயமானதல்ல. இதுதான் யதார்த்தம்.

இதன் காரணமாகத்தான் கவிதைகள் அவற்றைப் படைத்த கவிஞ ருள் உயிர்த்திருக்கும் மனிதனின் தன்மையையும், போலித்தன்மை யையும் வெகு சுலபமாக இனங்காட்டிவிடுகின்றது.

பிரவகிக்கும் கவிதை ஆத்மாவின் மொழி.

எழுதப்படும் கவிதை எண்ணத்தின் மொழி. ஆத்மா அழிவற்றது... எண்ணம் எளிதில் மாறக்கூடியது. கவிஞனாக இருப்பவனை விட, கவி ஞனாக வாழ்பவன் காலத்தை வென்றவனாகின்றான்.

தன் ஆத்மாவின் குரலை புறந்தள்ளி, மனதின் அபிலாஷைகளை மட்டும் கவிதைகளாக எழுத முற்படும்போது ஒரு கவிஞன் தன் சுயத்தை கொன்றவனாகின்றான் அவனது வரிகள் வெறும் வார்த்தைகளின் கவர்ச்சிக் குவியலாகவே இருக்கும். அவற்றை மனிதர்கள் அங்கீகரிக் கலாம். ஆனால் காலம் அவற்றை நிராகரித்துவிடும் என்பதற்கு வர லாற்று ஆதாரங்கள் உண்டு.

எழுதவேண்டுமென நினைத்து வலிந்து எழுதும் கவிதைகள் வேறு. 'எழுது' என உள்ளுணர்வு தூண்ட இயல்பாக எழுதும் கவி தைகள் வேறு, செயற்கையையும், இயற்கையையும் இனங்காணும் இடமே இதுதான்.

சொல்லடி சிவசக்தி - என்னைச் சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய் வல்லமை தாராயோ...! என மகாகவி பாரதி தன்னுள் உள்ளாக சுடர்விடும் கவிஞனை தானே இனம் கண்டு நேருக்குநேர் மகாசக்தியிடம் கேட்டானே... அதுதான் மனிதனுள்ளான ஒரு உண்மைக் கவிஞனதும்

கவிஞனுள்ளான ஒரு உண்மை மனிதனதும் ஆத்மாவின் கம்பீரமான தொனி...

இங்கே கவிஞன் அவனது கவிதை இனங்காட்டும் அதே வேளை ஒரு ஜீவ கவிதையை கவிஞன் அடையாளப்படுத்தும் அற்புதம் நிகழ்கிறது. இந்தப் படைப்பியல் ரகசியத்தைப் புரிந்துகொள்ளாத பல கவிஞர்கள் வெறும் மனிதர்களாக மரணித்துப்போகிறார்கள். சில கவி ஞர்கள் மாகவிகளாக மரணத்தின் பின்பும் வாழ்கிறார்கள்.

இப்போது கு. வீராவின் இரண்டாம் உயிர் கவிதை தொகுப்பில் கவி தைகள் சிலவற்றை மட்டும் உள்வாங்குவோம்.

கவிதையை கு. வீராவின் 'இரண்டாம் உயிர்' என அர்த்தம் கொள் ளலாமா?

'வீரா கடவுளிடம் கூறுகிறார்

"நீ தந்த ஆயுளுக்குள்
முடிந்தளவு அனுபவிப்பேன்
முடிந்தளவு பதிவுசெய்வேன்
காலநதியோரம்
காட்சிக்கு வைக்கப்படும்
என் கவிதைகள்
எனும் நம்பிக்கையில்"

இது அவருக்குள்ளான கவிஞனின் நம்பிக்கைக் குரலாகவே ஒலிக்கிறது. தன் சுயம் பற்றிய தெளிவும், நம்பிக்கையும் ஒரு கவிஞ னிடம் இருக்கும்வரை அவனுக்குள்ளான மனிதம் சத்தியத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்கும் அந்தச் சத்தியத்திற்கு இசைவானதா-கவே அவனது எழுத்துக்களும் சிந்தனையும் இருக்கும். மற்றொரு கவிதையில்

"நேற்று நிலவெறிக்கும் போது
எழுதத் தொடங்கினேன்
இன்று சூரியத் தேர் வந்து
சூடடிக்கும் பொழுதிலும்
முற்றுப் பெறவில்லை
கவிதை...
அட
வாழ்க்கையில்தான்
எழுத

எவ்வளவு இருக்கிறது" என்று தனக்குள் தானே பிரமித்து நிற்கும்போது அவருள் ஊற்றெடுத்து உடைப்பெடுக்கத் துடிக்கும் கவிதைப் பிரவாகத்தை இனம்காணமுடி கிறது. இத்தகைய இடைவிடாப் பிரவாகமே ஒரு கவிஞனின் நிரந்தர இருப்பிற்கு அடையாளம். வீராவின் கவிதைகள் அவர் உள் இருப்பின் வெளிப்பாடாக வார்த்தை உருக் கொண்டுள்ளதெனலாம். இவை அவரை அவரே உள்நோக்கி மதிப்பீடு செய்து வெளியிடும் பதிவுகள் என்றும் எண்ணமுடியும்.

எதுவானாலும் வீராவிடம் இடையறா சிந்தனையும், உத்வேகமான படைப்புத்திறனும், எப்போதும் உயிர்திருக்கும் மனிதமும், இயங்குநிலையில் இருப்பதை அவரது கவிதைகளில் பரவலாக காணப்படும், மனதில் 'சுருக்' கெனத் தைக்கும் வார்த்தைகளும், புருவத்தை உயர்த்தவைக்கும் வரிகளும் மனதை சிலிர்க்கவைக்கும் கருத்து வெளிப்பாடும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இந்தவகையில் அவரது ஆத்மாவின் ராகங்களாக இக்கவிதைகள் அமைந்துள் ளதை அவதானிக்கமுடிகிறது. கவிதைகள் தன் அன்றாட வாழ்வியலின் பிரிக்கமுடியாத அங்கமாக உள்ளது என்பதை அவரே பிரகடனம் செய்யும்போது, அது அவருக்கு பல கவிஞர்களைப்போன்று புகழ் மற்றும் பிரபல்யம் தேடும் ஒரு பொழுதுபோக்கு தொழிலல்ல என்பது புலனாகின்றது.

"இப்போதெல்லாம்
தினமும்
ஒரு கவிதையாவது
எழுதாமல் என்னால்
தூங்கமுடிவதில்லை
எனக்குள்
ஒரு குழப்பம்
கவிதை
எழுதுவதை
நான் தீர்மானிக்கிறேனா?
இல்லை
என்மூலம் வெளிப்பட
கவிதை
என்னைத் தீர்மானித்து
வைத்திருக்கிறதா?

என்ற அவரது ஒரு கவிதைவினா எழுப்புகிறது?"

அந்த வினாவுக்கான விடையை தேடும்போது வீராவுக்குள் கனன்று கொண்டிருக்கும் 'கவிதை தீ' அவரது படையியல் மற்றும் கருத்தியல் தளத்தினை தொடர்ந்து ஒளிர வைக்கும் என்ற எண்ணத்தை வலுப்படுத்துவதாக உள்ளது. அதனை ஒரு காலத் தேவையாக காலக் கடமையாக அவர் நினைக்கவேண்டிய தருணத்தை உணர்ந்து தொடர்ந்து எழுதவேண்டும்.

எம் மொழிக்கும் - இனத்திற்கும் காலக்கவிஞர்களின் இடையறா படைப்புச் சேவை முன்னெப்போதும் இல்லாதவாறு மிக அதிகமாக தேவைப்படுகிறது.

என்றும் அன்புடனும்
வாழ்த்துக்களுடனும்
**ச. ராதேயன்**

# வருடுவதில்...

பீறிடும் உணர்வுகள்
பிசிறாமல் வடிந்தோட
வடிவம் கொடுப்பது கவிதை
உணர்ச்சியின் வடிகாலாய்
உருவம் எடுப்பது கவிதை.
உணர்ந்ததைப் பிறருக்கு உணர்த்தக்
கவிஞன் நினைக்க வருவது கவிதை
மொழிகளின் அரசி கவிதை
மொழிதலின் அழகன். கவிஞன்
கு.வீரா
அவ்வைத் தமிழின் கொவ்வைப் பழம்
ஜயன் கவிதை ஒவ்வொன்றும்
தின்னத் தின்னத் தெவிட்டாத அமுதம்
'கொன்றை வேந்தன்' கண்ட
பழம் இலக்கியத் தளத்தில்
'இன்றை வேந்த'னாய் திகழும்
ஒப்பற்ற கவிஞன் கு.வீரா.
ஆறாய்ப் பாயும் கவியும்
கரும்புச்...
சாறாய் அதன் ருசியும்
"வீரா" என்கின்ற
ஈரெழுத்துச் சொரியும் கவித்தேன்
மாந்த மாந்த
தேவலோகம் கண்ணில் தெரியும்.

கு.வீரா.
சொல் சிக்கனம் பேணி
கவியாக்கும்
தமிழ் லக்கண ஞானி.
தூரம் கணித்து ஈட்டி எய்யும்
வீரம் விளைந்த விவேகி.

மானுட குலத்தின் நாடித்துடிப்புணர்ந்து
ஆரூடம் கூறும் அசல் சோதிடன்
தறிகெட்டழியும் சமுதாயத்தைச்
சரிசெய்யப் புறப்பட்ட சீர்திருத்தவாதி.
நெறி இதுவென்று சமூகத்தை
நிமிர்த்த நினைத்தபோது
வீரா கையில் எடுத்த ஆயுதம் கவிதை.

ஏதேதோ எழுதி
எச்சில் முத்தம் வாங்கும்
ஏவல் பாவலரிடையே
'தமிழ்த் தாயின்'
'உச்சி முத்தம்' வாங்கும்
கவிஞருள் ஒருவன் கு. வீரா
விற்பனைக்காய் கவி படைக்கும்
அற்பனாய் அல்லாமல் - தன்
கற்பனைக்கே சவால்விடும்
கர்வம் இவன் கவிதை.

'இரண்டாம் உயிர்'
அர்த்தம் பொதிந்த தலைப்பு.
இறந்தும் இறவாமல்
மீண்டும் உயிர்த்ததால்
இது 'இரண்டாம் உயிர்'.
நேற்றைய அழுகையையும்
இன்றைய எழுகையையும்
நாளைய நிமிர்கையையும்
இவன் கவிதைகளில் தரிசிக்கலாம்.
சாலப் பொருந்தும் கருத்துக்களைச்
சாற்றுதலன்றி
கோலம் மாறி யார்க்கும்
சோரம் போகாப் புனிதரில் ஒருவன்

ஒரு நேர்கோட்டில் பயணிக்கும்
நானும் உங்கள் சகபயணி என்பதால்
புளகாங்கதமாய் இருக்கிறது எனக்கும்!

வேத பாராயணம் ஓதும் திருவாயால்
காதுகுளிரக் கவி கேட்டாலே
அதுபோதும் எமக்கு மீதம் வாழ்வதற்கு.
பாட்டா... கவிதையா... சொற்பொழிவா...
பட்டிமன்றப் பேச்சா... எதைக்
கேட்டாலும் சொக்க வைப்பீர்களே.
இந்த 'வாலாயம்' எங்கு கற்றீர்கள்.
வாழ்க...
வளர்க...

வித்தகக் கவிஞர்
**வேலணையூர் சுரேஷ்**

# வெளியிடுவதில்...

"இரண்டாம் உயிரின் பிரசவம்"
இல்லை
இரண்டு உயிர்களின் பிரசவம்!

இக் கரையிலிருந்து
அக் கரைவரை
அக் கறையுடன்
ஒரு முறை மேயுங்களேன் . . .

இந்தக் கவிதைப் பூங்கொத்திற்குத் தண்ணீர் தெளித்து
உங்கள் கையில் தவழவிட்ட
உங்களுள் ஒருவன்

அன்புடன்
உங்கள் கலைஞன்
வர்ணராமேஸ்வரன்.

வாழ்த்துரையா? பதிப்புரையா? அல்லது வியப்புரையா?
எனக்கும்தான் ஒன்றும் புரியவில்லை.

காலநதி நீண்டு ஓடிக்கொண்டிருக்கும் பொழுதில் தாயின் அரவணைப்பு பால் குடித்த முலை, உறங்கிய மார்பு, தவழ்ந்த புழுதிமண் எவராலும் மறக்கமுடியாத, மறுக்க முடியாத ஈரஉணர்வுகள். கடந்தகால வாழ்வைப் புரட்டிப் பார்க்கும்போது என்னைத் தாங்கி அரவணைத்து தோள்கொடுத்து உலகிற்கு அறிமுகம் செய்த மறக்க முடியாத உறவுகளுள் இணுவை தா.மகாதேவக்குருக்கள் அவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் என்றும் எமக்கருள் கண்ணகை அம்பாளும் மறக்க முடியாதவர்கள்.

1990ஆம் ஆண்டளவில் இவர்கள் வீட்டிலேயே இரவுகளில் தங்குவது வழக்கம். அக்காலத்தில் அதிகாலைப் பொழுதிலும் மாலை வேளைகளிலும் வேதபாராயண வகுப்புகள் நடைபெறுவது வழக்கம். அவ்வேளைகளில் பல சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை வந்து வேதபாராயணம் செய்வார்கள். அங்கு வரும் அனைவரும் எனக்கும் நண்பர்களானார்கள். அப்படியாக கிடைத்த நட்பில் இன்றுவரை பழகும் நண்பர்களுள் கவிஞர் கு.வீரா என்று தற்பொழுது அறியப்படும் தம்பி கண்ணன் ஐயாவும் ஒருத்தர். இதற்கு மேலாக சிறிது காலம் என்னிடம் மிருதங்கமும் கற்றுக்கொண்டவர். இதன்மூலம் இவரது தந்தையார் முதல் குடும்பத்தார் அனைவரும் எனக்கும் எனது தந்தையாரான அமரர் இசைமேதை வர்ணகுலசிங்கம் அவர்களுக்கும் மிகவும் அறிமுகமானவர்களாயினர். நாம் 1992இல் இடம்பெயர்ந்து இணுவில் மஞ்சத்தடியில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக எமது குடும்பத்தாருடன் வாழ்ந்து வந்த வேளைகளில் இன்னும் இறுக்கமான நட்பு எமக்குள் ஏற்பட்டது.

நீண்ட வருட இடைவெளிக்குப் பின் 2014ம் ஆண்டு மஞ்சத்தடி முருகன் கோவிலில் எனது இசைக்கச்சேரிக்கு வந்த ரஸிகர்களுள் தம்பி வீராவும் ஒருவராக இருந்தார். கச்சேரி முடிந்ததும் அவரது அன்புக் கட்டளைக்கு இணங்கி அவரது இல்லம் சென்று மீண்டும் ஒருமுறை 90களுக்கு சென்று எல்லாவற்றிலுமிருந்து மீண்டோம். தம்பி வீராவின் சிம்மக்குரலை அவனின் வேதபாராயணத்தில் கேட்ட வன். அவனது விரல் அசைவை மிருதங்கம் கற்றுக்கொடுக்கும் போது பார்த்து மகிழ்ந்தவன். அவனது சமூகப்பொறுப்புடன் படைத்த படைப்புகள் பலவற்றையும் நேராகவும், காற்றலையூடாகவும், தொலைக்காட்சி ஊடாகவும் பார்த்தும் கேட்டும் ரஸித்தவன் நான்.

எனக்கு அவன் ரஸிகன்.

அவனுக்கு நான் ரஸிகன்.

எமது கலைப்படைப்புகள் பற்றி இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது தற்போதைய முயற்சிபற்றி நான் அவரிடம் வினவினேன். கோவில்களில் ஆன்மீகப் பணிகளும், சமயச் சொற்பொழிவுகளும் செய்வதாகக் கூறினார். எனக்கும் கேட்க வேண்டும் போலிருக்கிறதே என்றேன். இவற்றை ஒலிப்பதிவு செய்து வெளியிடலாமே என்றேன். அப்போது ஒரு பெருமூச்சுடன் எத்தனையோ விடயங்கள் எல்லாம் செய்து கிடப்பில் கிடக்கின்றன. யாராவது முன் வந்தால் வெளியிடலாம் என்று ஆதங்கத்துடன் வெளிப்படுத்தினார். நான் என்னாலான முயற்சிகளைச் செய்வதாக உறுதியளித்து முயற்சிகளைத் தொடரும்படி அன்புக் கட்டளையிட்டேன். அப்போது உள்ளே சென்று சில ஆக்கங்களை கையில் எடுத்து வந்தார். அதில் முதலாக என்கையில் அகப்பட்டு கண்ணில் பட்டது "கண்ணடிக்கும் காலம்" எனும் கவிதைக் கொத்து.

ஆகா! நான் ரஸித்த உங்களது வளர்ச்சிப் பாதையில் உங்களது கண்ணடிக்கும் காலத்தை தவறவிட்டு விட்டேன் என்றா இதைத்தருகிறீர்கள் என்றேன். வழமையான புன்னகையுடன் என்னைநோக்கி கவிதையிலாவது காதலிக்க விடமாட்டீர்களா? என்றார். நிழலாகவேண்டாம் நிஜமாக்கினால் மகிழ்வேன் என்றேன். அற்புதமான கவிதைவரிகள் எனக்குள்புகுந்து சிறகடித்தன. இப்போ நானும் கண்ணடிக்கும் காலத்திற்குள் சற்றுவிழுந்து எழும்பி தாகத்துடன் வேறும் இப்படி ஏதாவது இருக்கா? என்றேன். சற்று நிமிர்வுடன் எனது கையில் அடுத்ததாக தந்தார் "இரண்டாம் உயிர்" எனும் அற்புதமான அடுத்த கவிதைத்தொகுப்பு. அப்போது எப்படியாவது இந்த இரண்டு தொகுப்புக்களையும் நானே வெளியிடுகின்றேன் என்று உறுதியளித்தேன். அப்போது தம்பி வீரா அவர்கள் இப்படி எத்தனையோ பேர் எழுதிவைத்துவிட்டு வெளியிட முடியா-மல் தவித்துக்கொண்டிருப்பதாக என்னிடம் மிகுந்த கவலையுடன் சொன்னார். என் கண்கள் கலங்கின. தான்மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கும் இன்றைய உலகில் மற்றவர்களுக்காகவும் கலங்கும் ஒரு சமூக அக்கறையுடன் கூடிய கலைஞன் தம்பி கவிஞர் வீராவுக்கு மட்டுமல்லாது என்னால் முடிந்தவரை ஏனையவர்களின் படைப்புகளுக்கும் உதவவேண்டும் என்று எண்ணினேன்.

இதன்விளைவாகவே அண்மையில் அமரத்துவமடைந்த எனது தந்தையார் இசைமேதை கலாபூஷணம், கலாரத்தினம் சிவஸ்ரீ.மு.வர்ணகுலசிங்கம் அவர்கள்

நினைவாக "வர்ணம்கிரியேஷன்ஸ்" எனும் ஆக்கவெளியீட்டகம் ஒன்றை உருவாக்கும் எண்ணம் செயல்வடிவம் பெறுகிறது. இந்த ஆக்கவெளியீட்டகம் மேலும் வளர வலுப் பெற உங்கள் அனைவரதும் கரங்களும் மனங்களும் உறுதுணையாகட்டும். இதன் முதல் வெளியீடாகக் கவிஞர் கு. வீராவின் "கண்ணடிக்கும் காலம்" அடுத்து "இரண்டாம் உயிர்" எனும் கவிதைத்தொகுப்புடன், அவரது குரலில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளும் ஒலியிழை இறுவட்டாகவும் வெளிவருகின்றன என்பது மகிழ்ச்சியே. இந்த "வர்ணம் கிரியேஷன்ஸ்" எனும் ஆக்கவெளியீட்டகத்தில் என்னோடு இணைந்து பல துறைசார்ந்த அறிஞர்களும், அனுபவம்மிக்க படைப்பாளிகளும், கலைஞர்களும் இடம்பெறுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த கவிதை தொகுப்புகள் இரண்டும் நறுமணத்துடன் வெளிவரக் காரணமாய் இருந்து தட்டச்சு, வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு முதல் வெளியீடுவரை உழைத்த Noble Printers நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் குறிப்பாக இராதேயன் அண்ணா மற்றும் ரமணிமாஸ்டர் ஆகியோருக்கும் எமது நன்றிகளையும் அன்பையும் வெளிப்படுத்தி மகிழ்கின்றோம்.

எமது தொடர் முயற்சிகள் வெற்றி பெறுவதோடு, தமது சொந்த ஆக்கங்களை வெளியிட முடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் படைப்பாளிகளின் ஆக்கங்கள் வெளிவர உங்கள் ஊக்கங்களையும், கருத்துக்களையும் வரவேற்கின்றேம்.

உலகெங்கும் சிதறி வாழும் தமிழ் உறவுகள் இந்தப்படைப்புகளை முதலில் நீங்கள் பெற்று அனுபவிப்பதோடு இதில் ஈடுபாடுகொண்ட ஆர்வலர்களையும் இணைக்க வழிசெய்வீர்களானால் உலகத்தமிழ் படைப்பாளிகளை கலைஞர்களை ஒருங்கிணைக்கும் எமது பணி இலகுவாகும்.

தொடர்புகளுக்கு

"வர்ணம் கிரியேஷன்ஸ்"
**"Varnam Creations"**
A.M.VARNAKULASINGAM,
SIRUVILLAN,
ILAVALLAI,
SRILANKA.

69 RANDALL AVE,
MARKHAM, ONT,
L3S 1E2,
CANADA.

001(416) -265-8884
varnam@gmail.com

# வார்த்திதல்...

இது எனது இரண்டாவது படைப்பு அதனால் இது இரண்டாம் உயிர். துதிபாடியே துவண்டு விழுந்த தமிழ்க்கவிதையை புதிதுசெய்து இரண்டாம் உயிர்தந்த எழுத்துத்தீ பாரதிக்கு இந்நூலை படையல் செய்துள்ளதால் இது இரண்டாம் உயிர். என் வாழ்வியல்பாதையின் பயணத்தில் திடீர்திருப்பத்தை காலம் ஏற்படுத்திவிட்ட மையால் இது இரண்டாம் உயிர். இப்படி நூலின் தலைப்பிற்காக நான் எத்தனையோ விளக்கம் சொன்னாலும் முத்தாய்ப்பாய்... அனுபவங்கள் புரட்டிப்போட்ட பழைய காகிதமாய் விரக்தியுற்றிருந்த நாளாந்தங்களில், உண்மை உணர்வுகளை எல்லாம் ஓரம்தள்ளிவிட்டு ஒப்பனை ஒய்யாரங்கள் கோலோச்சும் கொடுமைச் சூழல்களில், யாருமற்ற தீவாய் ஒற்றை மனிதமாய் உருக்குலைந்த நிமிஷங்களில், உயிரைத்தவிர எல்லாம் இழந்திருந்த பிணத்தருணங்களில் எல்லாம் சமூகத்துடன் இணைந்து ஒரு சாமானியனாகவே வாழ்வதற்கான மானுடம் புதுக்கிய "நம்பிக்கை வேரைத்தான்" கடவுளாய் கொண்டதால் இதனையே இரண்டாம் உயிராய் எடுத்துப்போற்றிடும் எண்ணத்தின் வெளிப்பாடே இந்த தலைப்பு. ஆம் ஒவ்வொரு மனிதனிடமும் என்ன இருந்தென்ன தன்னம்பிக்கை மட்டும் இல்லையென்றால் அவன் சுவாசிக்கும் பிணம் அவளவே. அதனால்தான்

"ஒற்றை உயிர்மட்டும் போதாது வாழ்வதற்கு
இரண்டாம் உயிராக இனிவேண்டும் நம்பிக்கை"

என்னும் பிரகடனத்தின் முன்மொழிவாக பூத்தது இக்கவிதைத் தொகுப்பு. இதன் பின்னிணைப்பாய் இந்நூலில் உள்ள முத்தாய்ப்புக் கவிதைகள் சில ஒலிக்கவிதையாகி பின்னணி இசைசேர இறுவெட்டாகி இந்நூலுடன் இணைக்கப்பட்டிருப்பது இன்னும்பூரிப்பு.

இதைவிட இந்தக்கவிதைகளைப்பற்றி வேறெதனையும் நான் சொல்லப்போவதில்லை. அதற்கான தேவைகளும் இல்லை. கவிதைகள் தன்வேலையை பார்த்துக்கொள்ளட்டும். சில வேளை இவை கவிதைகள்தானா என்ற கேள்வி கூட எழக்கூடும்

அதையும் விமர்சனக்காரர்கள் பார்த்துக்கொள்ளட்டும். ஆனாலும் ஒன்று சொல்ல பிரியப்படுகின்றேன். என்னை நன்றாய் தெரிந்தவர்களுக்கு நான் எதுவுமே சொல்லப்போவதில்லை. காரணம் அவர்களுக்கு என்னைத்தெரியும். ஆனால் தெரியாமல் இந்தக் கவிதைகளுடன் முதன்முதல் அறிமுகமாகுபவர்களிடம் ஒருசிறு விஷயம் பகிர ஆசைப் படுகின்றேன். இந்தக்கவிதைகளில் ஆங்காங்கே என்னை காண லாம். ஆனால் இவைகள் மட்டும்தான் எனக்கான அடையாளங்களாய் இல்லை. வீதிவிபத்தை தடுக்க தலைக்கவசம் அணிந்து பயணிப்பது மாதிரி வாழ்க்கை விபத்தை தடுக்க தலைக்கவசமணிந்த தமிழுடன் சிலவேளைகளில் வீதிக்கு வரவேண்டியிருக்கின்றது. பாதைகளின் பரபரப்பில் பயணிப்பவர்கள் எல்லோரும் ஒரே மாதிரி தெரியலாம் ஆனால் நின்று நிதானித்து உற்றுப்பார்த்தால் உண்மை புரியும்.

உள்ளூருக்குள் வந்துவிட்ட உலகமயமாக்கல் வெங்காயத்தை கூட ரின்னில் அடைத்து தருகிறது. ஊடகங்களை திறக்கும் போதெல்லாம் பொலபொலவென கொட்டுகின்றன போலிகளும் புளுகுகளும். ரெடிமேற் சாப்பாட்டில் வடிவாய் கழிகிறது காலம். ஒற்றைச் செல்போனில் ஒவ்வொரு நாளும் நடக்கிறது உலகப்போர். பாவம் இச்சூழலில் கவிதைகள்தான் என்ன செய்யும் என்னைப்போல் புலம்புவதை தவிர... மீண்டும் சொல்கிறேன் இரண்டாம் உயிராக இனிவேண்டும் நம்பிக்கை.

இந்நூல் உருவாக்கத்திற்கு திறவுகோல்களாகவும் துணைக்கோள் களாகவும் இருந்த எழுத்தாளர் திரு ராதேயன் ஆசிரியர் அவர்களுக்கும் கவிஞர் வேலணையூர் சுரேஷ் அவர்களுக்கும், வீட்டில் எழுத்தாக கிடந்த கவிதைகளை ஏட்டில் நூலாக்கும் வாய்ப்பினை இறுக்கமான பாசப்பிணைப்பின் காரணமாய் எனக்கு வழங்கிய அன்பு அண்ணன் உலகறிந்த உணர்வுப்பாடகர் திரு. வர்ணராமேஸ்வரன் அவர்களுக்கும், வெளியிட்டு ஒளிகொடுத்த வர்ணராமேஸ்வரன் மற்றும் அவர்போன்ற சில ஆர்வலர்களும் இணைந்து (வர்ணராமேஸ்வரனது தந்தையாரான) மறைந்த இசை மாமேதை வர்ணகுலசிங்கம் ஆசிரியரின் நினைவாக உருவாக்கப்பட்ட வர்ணம் கிரியேஷன்ஸ் நிறுவனத்திற்கும் என்றென் றும் நன்றிக்கடனுடையவனாகின்றேன். இதுபோன்று இன்னும் பலரது படைப்புக்களை அவர்கள் வெளியிடவேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன்.

முகப்பழகை சிறப்பாய் வடிவமைத்து நூலுக்கு மிகப் பெருமைசேர்த்த எங்கள் கௌரவ அடையாளங்களில் ஒருவ ரான ஓவியர் திரு. ரமணி ஆசிரியர் அவர்களுக்கும், கவிதை களின் ஆழம் உணர்ந்து அழகுடன் கலைநயப்படுத்தி நூலழகு செய்த சகோதரி வித்தியாவிற்கும், அச்சழகை அற்புதமாய் அரங்கேற்றிய நோபிள்ஸ் நிறுவனத்திற்கும் அதன் அதிபர் திரு. சிறீ அவர்களுக்கும், இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் புகைப்படங்களை பெற உதவிய இணையத்தளங்களுக்கும், ஒலிக்கவிதை இறுவெட்டில் இசையமைத்து ஒலிப்பதிவாக்கிய திரு. சுதர்சன் அவர்களுக்கும் என்றென்றும் நன்றிகள்.

என் எல்லாவற்றிலும் துணையிருக்கும் அப்பாவின் ஆசி களுடன், மற்றும் அம்மா, அண்ணா, அண்ணி, சாத்வீகன், சர்வாணி, லோஜன், சதுராங்கன், தத்வஜன், மற்றும் என்றும் எனக்காய் ஆண்ட வன் அருளிய அன்பு உள்ளங்களான பவானி அக்கா, ரங்கன் அண்ணா மற்றும் பிள்ளைகள், தோள்கொடுக்கும் உறவுகளான விஜயநாதன், சிவகாமி, கலைநிலா, இன்னும் அஜித்குமார், சுபா, யாமு மற்றும் இசைப்பிரியன், சர்வேஸ்வரா ஆகியோரும் என்றும் என் நன்றிக்குரிய வர்கள்.

இனி உள்ளே உங்களுக்காய் காத்திருக்கின்றன கவிதைகள். வாசியுங்கள். ஆக்கபூர்வமான கருத்துகளை வழங்குங்கள். சம காலச்சமூகத்தின் சகபயணியாய் இன்னும் அடுத்தடுத்த நூல்களில் சந்திக்கிறேன். கடவுளும், காலமும் அனுமதிக்கும் வரை... உலகமும், உள்ளமும் ஒத்துழைக்கும் வரை... இன்னுமின்னும் எழுதிக்கொண்டே இருப்பேன்.

என்றும் அன்புடன்...


கு. வீரா
15/01/2015

Email: poetkveera@gmail.com



"துதிபாடி துதிபாடி
துவண்டு விழுந்த
தமிழ்க்கவிதையை
புதிதுசெய்து
இரண்டாம் உயிர்தந்து
எழுந்து நிமிரச்செய்த
எழுத்துத்... தீ
**பாரதிக்கும்** அவன்
**பாரியாருக்கும்**
இது படையல்."

“ஆருயிர் உபயம்
அம்மையப்பன்
அடையாளம்
கொடுத்தது
ஆதவன் ஒளிக்கரம்
பேரினை தந்தது
புன்னகைச்செல்வம்
பெறுமதி சேர்த்தது
ரத்தினச் சிற்பம்”






# முதல்

உயிரினங்கள் உச்சரிக்கும்
முதல் கவிதை
கவிதைகளெல்லாம் கைதொழும்
முதல் உயிர்
அம்மா!!!.

# முதல்வணக்கம்

நாடுகளின் கொடிகளுக்கு
தலைசாய்ப்பது தர்மம்தான்
ஆனாலும்...
உன்தாயின் முந்தானைக்கு
எப்போதும் செய்
முதல்வணக்கம்.



# ஆரம்பம்

விழுந்தால் காயம்வருமென்று
நினைத்துக்கொண்டிருப்பதில்லை
நடைபயிலும்
குழந்தை

மழைகாலத்திற்காய்
சேகரிக்கப்படும் உணவுகள்
செல்லரிக்கப்படுமோ என
எண்ணிக்கொண்டிருப்பதில்லை
எறும்புகள்

மண்ணை முட்டினால்
மண்டை வலிக்குமென்று
முனகிக்கொண்டிருப்பதில்லை
முளைக்கத்தொடங்கும்
விதைகள்

சிந்தித்து கொண்டேயிராமல்
ஆரம்பித்து விடுவதே
அரைப்பங்கு வெற்றியை
தீர்மானித்து விடுகிறது

செயல்களாகாத
சிந்தனைகளெல்லாம்
ஜீவனில்லாத பிணங்கள்

எதையும் முதல்
ஆரம்பி

முதல்பக்கத்தை
பார்த்தபடி
முழிபிதுங்கி நின்றால்
வாசித்து முடிக்கப்படாது
வாழ்க்கைப்புத்தகம்.



# மானுடம்

இயற்கையின் வனப்பெல்லாம்
நுகரக்கிடைத்திருக்கிறது
ஒரு அற்புத வாய்ப்பு

வாழ்கையெனும் சாகரத்துள்
மூழ்கி மூழ்கி முத்தெடுத்து
திளைத்திருக்க
கிடைத்திருக்கிறது
ஒரு இனிய வரம்

இன்பதுன்பங்களில்
இரண்டறக்கலந்து
பிறவிப்பயனின்
முழுமையும்
அறியக்கிடைத்திருக்கிறது
அருமையான சந்தர்ப்பம்


குழந்தை வாலிபம்
முதுமை என
தோற்றங்கள்
பேணியும்
மகன் தம்பி
நண்பன் காதலன்
கணவன் தந்தை
சமூகசேவகன்
என்றெல்லாம்
பாத்திரம் மாறியும்
பயணிக்க கிடைத்த
தொடர்நாடகம்



அழுகைக்கும்
சிரிப்பிற்கும்
இடையில்
ஆடிக்கொண்டிருக்கும்
ஊஞ்சல்

அன்பு பாசம்
பற்று பரிவு
ஆசை காதல் காமம்
கோபம் வேகம்
பயம் பக்தி
உணர்வுகளில் குழைத்து
உருவாக்கிய
ஊன்உருவம்
நல்லதே செய்வதற்காய்
நானிலத்துக்கு
சொல்லி அனுப்பப்பட்ட
உயிர்

கலை கலாசாரம்
மொழி மதச்சிறகுகளில்
மழை வெயில் பணி
காலக்கலவைகளில்
கரைந்து
நிலைகொள்ளாமல்
திரிந்து
நீட்சிபெற்ற
நித்தியம்



வானவில்லில் வாசமலரில்
தேன்துளியில் தென்றலில்
மேக உருவில்
மின்னல் கீற்றில்
போகம்நிறை பச்சைவயலில்
புறாச்சிறகில்
துலாக்கிணறில்
துளசிச்செடியில்
கோலநிலவில்
குமிண்சிரிப்பில்
ஆலமரநிழலில்
ஆலயத்து கோபுரத்தில்
என
காணும் அனைத்திலும்
கடவுள் தரிசனத்தை
கவிதைத்தருணங்களை
கச்சிதமாய் கவ்வக்கிடைத்த
காவியப்பிறப்பு

உடலின்
இழையங்கள் தோறும்
ஐம்புலன்கள்
தேயத்தேய
அனுபவித்து சுகித்தும்
அழியாத அன்பில்
இதயத்தை நிறைக்கவும்
கிடைத்த
அரிய படைப்பு



இத்தனை மேன்மைகளின்
இடையில்
ஆயுள்விசையில் மட்டும்
சூட்சுமம் வைத்து
இறைவா!!!
என் ஆன்மாவை
மனிதப்பிறப்பாய்
மலர்த்திவிட்டாயே
மனிதம் என்னும்
மகோன்னதத்தை
புனிதப்பொருளாய்
ஸ்ருஷ்டித்து விட்டாயே





உனக்கு என்
கோடானுகோடி
நன்றிகள்

நீ தந்த ஆயுளுக்குள்
முடிந்தளவு...
அனுபவிப்பேன்
முடிந்தளவு.
பதிவுசெய்வேன்

காலநதியோரம்
காட்சிக்கு வைக்கப்படும்
என் கவிதைகள்
எனும் நம்பிக்கையில்.



# முதல்காதல் மழை

மஞ்சள் வெய்யில்
மெழுகும் மாலைநேரம்
ஈரக்காற்றின்
குளிர்சுவாசம்
சுழற்சிமுறையில்
நுரையீரல் தொட்டு
திரும்புகிறது

தெருவோர செடிகளிலெல்லாம்
திருவிழா குதூகலிப்பாய்
பூக்களின் அணிவகுப்பு
சிரிப்பு பூக்களை
சில்லறையாய் சிதறவிடும்
சின்னஞ்சிறுசுகள்

பேருந்து நிறுத்தத்தில்
வழமைகளில் ஒன்றாய்
நானும்

தார்ச்சாலை வழியே
தரிப்பிற்கு வருகிறது
பேருந்து என்னும்
பயணிகளின்
தங்கரதம்
பிதுங்கி விழுகின்றனர்
பிரயாணிகள்
அவிழ்த்துவிட்ட
தேங்காய் சாக்காய்

இடையில்...
சட்டென வெட்டியது
ஒரு மின்னல் கீற்று

இரவின் திரட்சியாய்
சேர்த்துவைத்த
கூந்தல்காட்டின்
உற்சாக சலசலப்பு
அதில் செஞ்சிவப்பாய்
இதழ் அடுக்கு
ஒற்றை ரோஜா

படபடக்கும்
பட்டாம்பூச்சிகளிரண்டாய்
நின்ற இடத்தில்
உற்றுப்பார்க்கும்
திராட்சை கண்கள்





சந்தணக் குழம்பில்
குங்குமப்பூ போட்டதாய்
ஒரு உருவம்

மூன்றாம்பிறை நெற்றி
முன்வளைந்த வில்புருவம்
இருபுருவச்சந்தியில்
இரத்தச்சிவப்பு பொட்டு
பன்னீர்ப்பூ மூக்கு
அப்பிள் கன்னம்
கற்றைமுடி
காற்றைக்கோத
தகதகவென மின்னும்
தங்கக்காதுகள்
அலட்சியமாய்
அநாயாசமாய்
ஓரப்புன்னகையை
உதறிவிட்டிருக்கும்
ஸ்ரோபெரி உதடுகள்

சங்குக்கழுத்தில்
சின்னச்சங்கிலி
அந்த வெண்பரப்புகளில்
ஒரு ஞானச்சிற்பியின்
கவனத்தோடு
செதுக்கப்பட்டிருக்கிறது
சேலையணிந்த லாவகம்

பட்டு மல்லிகை
கைகளை
தொட்டு விளையாடுகிறது
காற்று



இடையின்
இடைவெளியில் தெரியும்
மத்தியப்பிரதேசத்தில்
செத்துவிடத்தோன்றும்
ஒரு சிருங்காரம்.

மூடிவைத்த
ஜோடிப்புறாக்களாய்
மல்லிகைப்பந்துகளாய்
தாழ்ந்து எழுகிறது
மார்புப்பஞ்சணை

இடையின்
மெல்லசைவில்
படியிறங்கி
நடந்துவருகிறாள்
ஓ!
இது ஒன்றும்
அசையாத சிலையல்ல

பிரமன் தன்
படைப்புப் பரீட்சையில்
சித்தியடைவதற்காக
தன் நான்கு
சிரங்களிலும் சிந்தித்து
உருவாக்கிய
அற்புத ஆக்கம்

மானுடப்பெண்ணாய்
தோன்றியிருக்கும்
பிரபஞ்ச அழகின்
பிழிந்தெடுத்த
சாறுவடிவம்


மன்மதக்கலையின்
மகோன்னதத்தில்
குழைத்தெடுத்த
குங்கும நந்தவனம்

தாமரைப்பூப்பாதங்களை
நிலத்தில் ஒத்தி
நடந்து வருகிறாள்

எதிரில் வரும்போதே
எண்ணங்களெல்லாம்
பட்டாம்பூச்சிகளாகின்றன

காற்றில் தவழ்ந்த
கூந்தல் விலக்கி
இதழோரம் இனிக்கும்
ஒய்யாரச்சிரிப்போடு
மரகதக் கண்கள்
மலர்த்தி ஒருதரம்
எதேட்சையாய் திரும்பி
என்னைப் பார்த்தாள்

சோ வென்று பெய்தது
என் மனசில்
முதல் காதல் மழை.



# பரபரப்பு


உலக முகடுகளில்
நாசாவின் நர்த்தனம்

செயற்கை மழைமுதல்
செயற்கை மனிதன்வரை
விஞ்ஞான வெற்றிகளின்
விசிலடிப்புக்குள்ளே
அழியும் காடுகளின்
அவலம் கேட்கவில்லை

உலகம் பரபரப்பாய்...


பாவம் !
ஓசோனின்
ஓட்டையடைக்கத்தான்
யாருக்கும் நேரமில்லை.





# நெஞ்சுபொறுக்குதில்லையே!

பயனுள்ளது சொல்
சபை ஏறாது
பகிடிகள் கதை
சபை சோராது
சிந்தனை கொடு
பிரயோசனமில்லை
சில்மிஷம் பேசு
பிழைப்புண்டு




யதார்த்தம் உரை
யாருமில்லை
பதார்த்தங்கள் கல
பலர் வருவர்

கதாநாயகனாயிரு
கவனிக்கமாட்டார்கள்
காமடியனாகிவிடு
கைதட்டி ரசிப்பார்கள்

இவ்வளவு ஏன்?...

மனசைப்பாடினால்
அவன் மடையன்
மார்புகளை பாடினால்
மகா கவிஞன்.



# ஒரு விழா நடக்கிறது

இப்போதெல்லாம்
மனிதவிசிறிகளைவிட
மின் விசிறிகளே
அதிகம்
மண்டப விழாக்களில்

பிளாஸ்ரிக் பூவை
தலையில் வைத்து
ஜீவனில்லாமலே சிரிக்கும்
பெண்கள்

அநாதையாய் வரவேற்கும்
பூரணகும்பம்

எண்ணெய்விட
ஆளின்றி ஏங்கும்
விளக்குகள்

செவிப்பறைகளை
கிழித்தெறியும்
ஸ்பீக்கர்


கூவிக்கூவியே
கூட்டத்தை குழப்பும்
செல்போன் குயில்கள்
சம்பிரதாய
வேட்டி சட்டை
சால்வையோடு
சில சந்தணப்பொட்டுகள்

பேசிக்கொண்டிருப்பவரின்
மறுபக்கத்தை
பேசிக்கொண்டிருக்கும்
சபை

மாலைகள் வாடமுன்பே
மனம்வாடவைத்துவிட்டு
மண்டபத்தை காலிசெய்யும்
மட்டமான பார்வையாளர்கள்

நன்றியுரைக்காய்
காத்திருக்கும்
வாகனச்சாரதிகள்

ஒட்டிவைத்த புன்னகை
ஒட்டாத கைகுலுக்கள்
விழாமுடிந்து வெளியில்வர
சிதறிக்கிடக்கும்
செருப்புகளும்
விமர்சனங்களும்



செயற்பட்டும்
துன்பப்படும் சிலரும்
செயல்ப்படாமலே
விமர்சித்து
இன்பப்படும் பலருமாய்
கலந்து
“கௌரவித்து”
கலைந்து போகும்
சிலமணி நேர
கொண்டாட்டம்

இதற்குப்பெயர்
விழா.




# மரங்களே... மரங்களே...

மழைத்தேவன்
வரம் தருவதற்காய்
ஒற்றைக்கால் தவமிருக்கும்
உத்தம புத்திரர்கள்.

மாசில்லாக்காற்றை
மனிதர்க்கு பரிசளிக்க
பாசமாய் பணியாற்றும்
பந்துமித்திரர்கள்.

விஞ்ஞானம் விளைக்கும்
விபரீதங்களுக்குள்ளும்
அஞ்சாமல் போராடும்
ஆபத்பாந்தவர்கள்.

பூமித்தாயின்
கூந்தல் காடுகள்தானே
உலக உருண்டையின்
சீதோஷ்ண சீராக்கிகள்.



மரங்களை
பண்டைத்தமிழன்
தெய்வமாக்கினான்
சங்கத்தமிழன்
உறவுகளாக்கினான்
இன்றைத்தழிழன்
வெட்டிவீழ்த்திறான்.

ராமனை போற்றியது
பாதுகையாக...
யேசுவை தாங்கியது
சிலுவையாக...
பாழ்பட்டமனிதனுக்குதான்
எதுவுமே புரிவதில்லை
கடவுளின் கருணையும்
மரங்களின் மகத்துவமும்.

தொட்டிலாய்...
கட்டிலாய்...
பெட்டியாய்...
சுவாசத்தொடக்கம் முதல்
சுடுகாட்டு பயணம் வரை
மனிதர்களுக்கு
எல்லாமுமாய் இருப்பவை
மரங்கள்
மரங்களுக்கு
வில்லனாய் மட்டுமே
மனிதர்கள்.

உலக சமாதானமும்
உயர் மானுடமும்
பேசிப்பேசியே
பிழைப்பை ஓட்டும்
மனிதர்காள்...

உங்களால்..
கற்பழிக்கப்படும்
காடுகளுக்கு
கருவறுக்கப்படும்
கற்பகதருக்களுக்கு
கொத்து கொத்தாய்
கொலை செய்யப்படும்
குலவிருட்ஷங்களுக்கு
என்ன பதில்...

மனித உரிமை மாநாடுகளுக்காய்
மண்டை காயும் மானுடசமுகமே
மர உரிமை மாநாடுகளை
ப்போது நிகழ்த்தப்போகிறீர்கள்?



# நல்லூரின் நாளாந்தம்

வெண்மணற்பரப்பே
கண்களுக்கு தெரியாமல்
பாதங்களால்...
நிரம்பி வழிகிறது
பக்தி வெள்ளம்

கடிகார முள்ளும்
கைமணியின் நாக்கும்
ஒருசேர நகர்த்தும்
துல்லியமான கிரியைகளால்
நித்தம் நிறைகிறது
கந்தன் கோட்டம்

சிதறும் தேங்காய் துகள்களில்
தெரிகின்றன
அழிந்த ஆணவங்களின்
எச்சங்களும்
அழுகைக்குள் நிறைவேறிய
நேர்த்திகளும்




சுத்திவர நடக்கும்
கானமழையும்
பக்தியோடு வணங்கும்
கண்ணீர்மழையும்
வெளித்தெரியாமலே
அடங்கிவிடுகின்றன
வியாபாரப் பேரிரைச்சலுக்குள்

தமிழ்கடவுளென
சொல்லப்படுபவனின்
வாசலில்
அடக்கடவுளே!

நல்லூர் சூழலையே
மல்ரிகொம்பிளக்ஸ் ஆக்கி
மார்தட்டி நிற்கிறது
உலகமயமாக்கல் என்னும்
உபத்திரவம்

ஆங்காங்கே
“பளிச்”சிடுகின்றன
களவாடப்படுவதற்காகவே
காட்சிக்கு வந்துள்ள
“தங்க”பவனிகளின்
தாராளமயங்கள்

காற்றில் சலசலக்கும்
கச்சான்கோதுகள் மட்டும்
தமக்குள் பேசிக்கொள்கின்றன
எதை நீ கொண்டுவந்தாய்
அதை இழப்பதற்கென்று





# முருகா

லட்சக்கணக்கில்
வந்துபோகிறார்கள்
அன்னதானத்தில்
ஒற்றை ஒருவனின்
பசியடக்க வழியில்லை

ஆயிரம்தான் இருந்தாலும்
கந்தவேள் வைத்திருக்கும்
கைவேலின் பிரகாசத்தில்
கண்கள் என்னவோ
கூசத்தான் செய்கின்றன.

தந்தைக்கே
பாடம் நடத்தியவன்
என்றைக்குமே
சும்மாயிரான்.

# பாசப்பசி

வேதகாலம் முதல்
வெப்சைற்காலம்வரை
தாய்மை தனித்துவமானது


அறிவியல் அற்புதங்கள்
அகிலத்தை ஆட்டலாம்

தாயின் மார்புக்காம்பில்
ஊறும் அன்பிற்குமட்டும்
எந்த
விஞ்ஞான சூத்திரங்களாலும்
விடைகாணமுடியாது.

# எழுத்து

நேற்று
நிலவெறிக்கும்போது
எழுதத்தொடங்கினேன்
இன்று
சூரியத்தேர்வந்து
சூடடிக்கும் பொழுதிலும்
முற்றுப்பெறவில்லை
கவிதை

அட
வாழ்க்கையில்தான்
எழுத
எவளவு இருக்கிறது.?





# காரணம்

நிசப்த நிமிஷம்
பூமலரும்
அதிர்வு

மகரந்த துகள்களின்
மன்மத அழைப்பு


பறவைப்பயணத்தில்
சிறகுகளின்
சிருங்காரத்தடம்

பஞ்சு முகில்களில்
படரும் ஈரலிப்பு

சூரியத்தாம்பாளத்தின்
இளங்காலைச்சூடு

பச்சை வெத்திலையில்
தெரியும்
ரேகை நரம்புகள்

காற்று கடத்திவரும்
மல்லிகைப்பூ வாசம்





எதிர்வீட்டு ஜன்னலில்
மின்னும்
பனித்துளி

செல்ல நாய்க்குட்டியின்
அதிகாலை
சில்மிஷம்

பாட்டியின்
பாக்கிடிக்கும்
தாளலயம்

வேலைக்காரியின்
இடுப்பில்
சொருகியிருக்கும்
கொசுவத்தின் நளினம்

முன்பள்ளி மொட்டுகளின்
முகிழ்சிரிப்பு

நாசியில் உட்காரும்
நாளிதழின் அச்சுமணம்

கறவைக்காம்பில்
சில்லிடும் குளிர்



கோயில் மணியோசை

இப்படி...
இயல்பு குலையா
இயற்கை அதிர்வுகளை
நின்று
நிதானித்து
ரசித்து
உணர்கிறாயா?....

சர்வ நிட்சயமாய்
சொல்லமுடியும்

உன் இதயத்தில்
அரும்பத்தொடங்கிவிட்டது
காதல்.

# ரகசியமாய்...



பூமிப்பெண்ணின்
கவர்ச்சிகளில்
கரைகிறது என்மனது

நெற்றிப்பொட்டாய்
நிலவின் குளிர்ச்சியில்
சொக்கிப்போகிறது வயசு

மேகப்பஞ்சின்
மென்மையில்
மிதக்கிறது கனவு

சில்லிடும் காற்றில்
நாடிநரம்பெல்லாம்
உற்சாக கிளுகிளுப்பு

மழைவிழுதுகள்
கைநீட்டி அணைக்க
உயிரின் அடிவரை
ஊறும் அதிசயம்

மலை வழி
பாயும் அருவி
கலைநயம் பொங்கும்
காதல்

அடர்ந்த காட்டின்
ஒட்சிசன் தானே
உயிர்வாழ உதவும்
ஊற்று



பறவைகள் பாடும்
மொழியில் உண்டு
இதயம் நனைக்கும்
சங்கீதம்

பச்சை வயலை
பார்க்கும் தோறும்
இச்சை தூண்டும்
எழில்

கறவைகள் செல்லும்
அழகில்
காம்பில் வழிகிறது
கவிதை

உச்சிவகிடெடுத்த
ஊர்வீதிகளில்
செம்பாட்டு மண்ணில்
பண்பாட்டுப் படிமம்

கலப்பைக்கும்
கம்யூட்டருக்குமிடையே
கரைந்து போயுள்ள
இனிய வாழ்க்கை

கோயில் மணியின்
கிங்கிணி நாதமும்
கோபுரத்து புறாவின்
சிறகடிப்பு ஓசையும்
ஆயுள் உள்ளவரை
ஆனந்த நிமிஷங்கள்
பூவின் மகரந்தமாய்
பூத்திருக்கும் உறவுகள்

காதலியின்
கைக்குட்டையாய்
பத்திரப்படுத்த துடிக்கும்
என் வீட்டு துளசிச்செடி
மனைவியால் மறக்கமுடியா
முதல்ராத்திரி மாதிரி
மனசுக்குள்ளேயே இருக்கும்
என் முதல் கவிதை

துன்பங்கள் கடக்க
இன்பங்கள் துய்க்க
எப்போதும் ஊற்றெடுக்கும்
என் எழுதுகோல்

சூரியப்பாட்டின்
சூட்டின் மெட்டின்
வேர்வையில் வழியும்
உழைப்பு





இது போதும்
எனக்கு
பூமிப்பெண்ணே!!
பூமிப்பெண்ணே!!
ஓயாமல் சுழல்வதால்
இன்னும் இளமைபொங்கி
இருக்கிறாய் நீ

என்னுடலின்
ஒவ்வோர் கலங்களிலும்
உன்னை
அணுஅணுவாய்
ரசிக்கிறேன்

என் ஆயுளின்
நீளம் வரை
என் கவிதையின்
ஆழம் வரை
உன்னோடு
சுவாசித்திருப்பேன்

சாமானியனாய் அல்ல
இயற்கைத் தேவியே!
எப்போதும் உன்
ரகசிய காதலனாய்...





## பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா

அரக்கப்பரக்க காதலித்து
அவள்தேவை தீர்ந்தவுடன்
சரக்கு போத்தலுக்குள் விழுத்திவிடும்
சதிகாரிளாம்...

கல்யாண மாலையின்பின்
கணவனை கைப்பொம்மையாக்கி
எல்லாமே உறிஞ்சிவிடும்
ஏமாற்றுகாரிகளாம்...

நவக்கிரகங்களின்
துர்ப்பார்வைகள்தான்
நவநாகரிக சேலைசுடிதார்களில்
நடைபோடுகிறதாம்...

அணுஆயுதங்களை விட
அழுகை ஆயுதங்கள்
அழிவை அதிகப்படுத்துமாம்...

போர்களின் சேதங்களைவிட
பெண்களின்
புன்னகையில் சேதமானவை
புள்ளிவிபரப்படி
அதிகம்தானாம்...

என் இனிய
ஆண்மைப்பெருமக்களே !
சத்தியம் சொல்லுங்கள்...

தாயின் முந்தானை வாசத்தில்
மனைவியின் மார்புகளின்
மையச்சூட்டில்
பிஞ்சுமகள் பிரியமாய்தரும்
அஞ்சுக முத்தத்தில்...

மெய்மறந்து மெய்மறந்து..
உங்கள் உயிர்
உருகி வழிந்ததில்லை.

அன்பு என்றசொல்லுக்கு
அகராதிகளில்...
ஆயிரம் அர்த்தமிருக்கும்
ஆனால்
வாழ்க்கையில்...
பெண்களுக்கு மட்டுமே
அது பொருத்தம்.





# புரியும்தானா?

தொழில் நுட்பவளர்ச்சியில்
உலகம் எங்குமே
கடத்தப்படக் கூடும்
என் குரலின் அதிர்வெண்

இருந்தாலும்...

எந்த செல்பேசிக்கு தெரியும்
என்
கண்ணீர்துளியில் இருக்கும்
உஷ்ணம்.



# இசைவாழ்வு

ஆரோகண தாலாட்டில்
தொடங்கி
அவரோகண ஒப்பாரியில்
முடிகிறது
மனித ஆயுளின்
இசைவாழ்வு.



# தரிசனம்

அந்திசாயும் பொழுது
ஒரு ஆலயச்சூழல்


உன்
நினைவுகளிலிருந்து
தப்பிக்க
அமைதிதேடி
கோயிலுக்கு வந்தேன்
வாசலிலோ
உன் கால்செருப்புகள்


பிரார்த்தனை செய்து
தேங்காய் உடைத்தாய்
உன் பேரழகில்
சிதறி
சின்னாபின்னமானது
என் மனசு

கற்பூர ஜோதியை
கடந்து போனாய்
கண்ணில் தெறித்தது
மின்னல்

கைவளையல் சிணுங்கியது
மணி ஒலித்தது
என் நரம்புக்குள்

நாதஸ்வர மல்லாரிக்கு
கைத்தாளம் போட்டது
உன் கால் கொலுசு





வாயில்ஏதோ முணுமுணுத்து
உள்வீதிவலம் வந்தாய்
என்ன இது
சேலைகட்டி வருகிறதே
ஒரு சித்திரத்தேர்

நெய்விளக்கேற்றி
திரிதூண்டிவிட்டாய்
என் இதயத்தில்
சுடர்விட்டு பிரகாசித்தது
காதல் தீபம்

கண்களை மூடி
கடவுளை தொழுதாய்
ஓரக்கண்ணால்
உன்னையே அளந்தேன்

சேலையணிந்த லாவகமும்
சிகை பின்னி
முடிந்த பூச்சரமும்
மருதாணி விரல்களும்

மங்கலப்பூமுகமும்
உற்சவமூர்த்தி அம்மனே
எழுந்தருளி
என்னெதிரில்

மூலாலயத்தில்
தொடங்கியது பூஜை

சுகந்த தூபம்
வெளிமண்டபம்
வரை பரவ...
என்னெதிரில்



சிறகுகள் மூடிவைத்த
தேவதையாய் நீ
தலையசைத்து நீ
கும்பிடும் போதெல்லாம்
காதில் ஆடிய
தொங்கட்டானில்
தொங்கிக்கொண்டிருந்தது
என் உயிர்

பூசைமுடிந்து
பிரசாதம் வந்தது
சந்தணகுங்குமம்
நீயிட்டுக்கொண்டாய்

அப்போது
குளிர்ச்சியடைந்தது
உன் நெற்றி
மட்டுமல்ல
என்வயசும் கூடவே

நீ
தீர்த்தம் குடித்தாய்
நான்
விழுங்கிக்கொண்டேன்

உன்
ஒவ்வொரு செயலிலும்
அதிக கவனமிருந்தது
அதை
பார்த்துப்பார்த்தே
என் கவனம் கலைந்தது

அம்பாளது பாதத்தில்
இருந்த பூ ஒன்று
ஐயரது கைமூலம்
உன்னிடம் வந்தது
பூவுக்கே பூக்கொடுத்த
நிகழ்ச்சி அது

அதை தலையில் சூட
மெல்ல
விழி நிமிர்த்தினாய்
அப்போது
கணப்பொழுதில்
உன் கடைக்கண் பார்வை
என்னில் பட்டது

பஞ்சாமிர்தப் பார்வையின்
தேன்தெறிப்பில்
மின்சாரம் தாக்கிய
அதிர்வு

வழிபாடு முடிந்து

ரும்பிக்கொண்டிருந்தாய்

அப்போ
உன் கூந்தலில் இருந்த
ஒற்றை ரோஜா
என் னைப்பார்த்து
னமாய்
ன்னகைத்தது

கடவுளே!!!
எனக்கும் கிடைத்துவிட்டது
தெய்வ சந்நிதியில்
தேவதையின் தரிசனம்.



# ஊரும் வீடும்


**அன்று...**
காற்றின் விரல்கள்
காதில் வருட
ஆன்மாவில் கரையும்
ஆலயமணிகள்


பால்க்கார பசுக்களின்
மேய்ச்சல் பேரணி
வீதி நிறைக்கும்
குளம்புகளின் காலடி

வேலிகள் தோறும்
புகையிலைத்தோரணங்கள்
கொல்லையில் கொலுவிருக்கும்
வெங்காய தூக்குகள்

முற்றத்தில் துளசி
முன்னால்
மல்லிகைப்பந்தல்

விழிவருடி
மனம் சுகிக்கும்
வேப்பமரக்காற்று





கப்பியையும்
கயிற்று வாளியையும்
அணிகலனாக்கி
ஆரோக்கிய பால்சுரக்கும்
அழகிய கிணறு

நரைத்த வயதுகள்
இறைக்கும் அனுபவ
வார்த்தைகளுக்காய்
இயற்றப்பட்ட
எம் வீட்டுத்திண்ணை

சண்முகலிங்கத்தின் பையன்
தரும் காலைத்தினசரிக்கும்
பரமு கொண்டுவரும்
பால் போத்தலுக்கும்
பழக்கப்பட்டே திறக்கும்
எம்வீட்டு படலை

கோடி பீட்சாக்களாலும்
இணைநிற்க முடியாத
வேலிப்பொட்டுக்களால்
பரிமாறப்படும் உணவுகள்





வீதியில்வரும் முகங்களில்
விகசித்த புன்னகை
உயிரின் வேர்வரை
உறவுகளின் ஈரலிப்பு

திருவிழாவின்
தேர்க்கயிற்றில்
திரண்டிருக்கும்
ஊர் ஒற்றுமை

இன்ப நிகழ்வுகளிலும்
இரங்கல் நிகழ்வுகளிலும்
பரிமாறப்படும் பாசம்

எல்லோருக்குமாய்
சுவாசிக்கும்
இனியவாழ்வு

**இன்று...**
கிடுகும் கிளுவையும்
கிடைத்தற்கரிதாகி
மதில்கள் வளர்ந்துவிட்டன
மனங்களுக்குள்ளும்

இயல்பாயிருந்த
இயற்கையின் முதுகில்
சீமேந்துக்காடுகளின்
சீக்கிரமயமாக்கல்

சினிமா இரைச்சலை
சீதனம் வாங்கிவரும்
பாண் வாகனங்களின்
சந்தடிக்குள்
அமுங்கிப்போய்விடும்
ஆலயமணிகள்






ஊதிப்பெருத்த பலூனாய்
வீங்கியிருக்கிறது பணம்
வீடுகள்தோறும்
பட்டுப்போய் கிடக்கிறது
பாசமும்
சிரிப்பும்

அப்பாவின் பென்சனுக்காய்
மாதமொருமுறை மட்டும்
வந்துபோகும் தபால்காரன்
மற்றவை ஈமெயிலில்...

எதிர்வீட்டுக்காரரின்
முகம் மறந்துபோய்
எதியோப்பிய நண்பருடன்
பேஸ்புக்கில்...

வாசலில்
பூங்கன்றுக்கு தண்ணீர்விடும்
கணவன்
போனில் பேசுகிறார்
வீட்டுக்குள்
வெங்காயம் உரிக்கும்
மனைவியிடம்



வாகனம் தூக்குவதற்கு
வாடகைக்கு ஆள்பிடிக்கும்
அவலத்தில் அல்லாடுகின்றன
ஆலய திருவிழாக்கள்

வீட்டுக்குள் இருப்பவரின்
தேவைகளை சிந்தியாமல்
தொலைக்காட்சி தொடருக்குள்
தொலையும் மணித்துளிகள்
விளம்பர இடைவேளை
விடும்போது மட்டும்தான்
விருந்தினர்கூட வரவேற்பு

இப்போ
வீதியில் போகும்
எந்தமுகங்களும்
வெளித்தெரிவதில்லை
தலைக்கவசம்
மறைப்பதால் அல்ல
தம்மை மறந்து பயணிப்பதால்

சுகதுக்க நிகழ்வுகளில்
ஒப்புக்கு வந்துபோகும்
உருவங்களாய் ஆட்கள்

மனிதம் தொலைத்த
மனிதர்களாய்
மாற்றிவிட்டிருக்கிறது
காலம்

தார்பூசிய வீதிகள்
வசதியாகத்தான்
இருக்கின்றன
ஆனால்
முன்னோர்களின்
காலடித்தடங்களை
முழுமையாய் மறைத்தபடி.





# மழை

நேற்று முன்தினம்
நீ வரவில்லை
மழைபெய்தது என்றாய்

நேற்றும்
நீ வரவில்லை
மழைபெய்தது என்றாய்

இன்று
நீ வந்தாய்
மழை எனக்குள்பெய்தது.


# வேண்டுதல்

“நான் பரீட்சையில்
சித்தியடைய வேண்டும்”
அரசடி விநாயகருக்கு
அடித்தேன் சிதறுதேங்காய்

அருகில் வணங்கியவரிடம்
ஒருவித வாட்டம்
வினவியபோது...
பல்கலை பட்டம்பெற்றும்
வேலைகிடைக்காத
விசனம் அவரிடம்

உடனே என்
வேண்டுதல் மாறியது

“பிள்ளையாரே நான்
வாழ்க்கையில்
சித்தியடையவேண்டும்”.






## முயற்சி

முலை முட்டிமுட்டி
பால்குடிக்கிறது
கன்று
ஏன்
நீ மட்டும்
முயற்சி செய்து
எதையும் பெறக்கூடாது.?



## சுமை

எறும்பு
தன்னளவில்
ஐம்பதுமடங்கு நிறையை
தானே சுமக்கிறது
நீ மட்டும்
ஏன்
உனக்கே பாரமாய்?



# காதல் மனைவி

அவள் கண்களுக்குள்
நானாக கரைந்து போக...

என்
கனவுகளிலும் லட்சியங்களிலும்
கைகோர்த்தபடி வர...

அன்பின் அத்தனை
புனிதங்களையும்
நான் அனுபவித்தறிய...

அவள் பாசமழைக்குள்
இதய மடிப்புகளுக்குள்
சுவாசத்தின் உஷ்ணத்துக்குள்
காதலெனும்
அள்ளஅள்ள குறையாத
அட்ஷயபாத்திரத்துக்குள்
விரும்பி என்னையே
நானாக
தொலைத்துப்போக...






அவளுக்கான
என் கவிதைகளில்
என் உயிரையே
உருக்கி வார்க்க...

உயர்ந்த பரிவை
உள்ளத்தின் பற்றை
உய்த்துணர...

பெண்மைதான்
உலகின் முழுமையென்ற
உண்மை ஞானத்தை
அனுபவித்து அடிபணிய...

அவள் மனசுக்கும்
எண்ணங்களுக்கும்
எப்போதும் மதிப்பளித்து
என்னையும் ஒரு
மனிதனாக ஆக்கிக்கொள்ள...



புரிந்துணர்வு எனும்
பொறுப்பான உணர்வுக்குள்
உள்நுழைந்து உள்நுழைந்து
வாழ்க்கைப் புதையலை
வாரியெடுக்க...

அவள்
கூந்தலுக்கு சிக்கெடுத்து
கனவுகளுக்கு துணையிருந்து
ஆழ்மனசின் முத்தெடுத்து
காதலின்
கொடுக்கல் வாங்கலை
கச்சிதமாய் செய்துமுடிக்க...

ஆசாபாசங்களிலும்
இன்பதுன்பங்களிலும்
இருவருமே சேர்ந்து
இணைபிரியாமல்
எதிர்கொாண்டு
ஆறுதல்கள் பரிமாறும்
அன்பினிலே நெகிழ்ந்துவிட...




உலகில் உள்ள
இன்பமெல்லாம்
மூச்சுமுட்ட நுகர்ந்துவிட...

அவள்
ஒற்றைப்பார்வையில்
கீற்றுப்புன்னகையில்
என் ஜீவன்
முக்திபெற...

இடம்மாறிய இதயங்கள்
எவளவு வயதுகடந்தும்
இளமை குன்றாது
அரவணைத்திருக்க...


மனிதப்பிறப்பின்
மகோன்னதங்கள்
புரிந்துகொள்ள...

இப்படி
இன்னும் இன்னும்
எவளவோ... எவளவோ...



அனைத்தின் மேலாய்...
தாய்மையின்
பரிபூரண நிமிஷங்களில்
ஆறுதலாய் அரவணைத்து
அவள் கண்கள்வெளியிடும்
அந்த கண்ணீர்துளியை
சட்டென என்
உள்ளங்கையில் ஏந்திக்கொள்ள..

இறைவா !
வேண்டும் எனக்கொரு
காதல் மனைவி.





# களவுபோன காதல்

போர்ச்சூழலில்
ஊரைப்பிரிந்தவன்
உயிர்மட்டும்
மிஞ்ச மீண்டுவந்தான்.

தாய் தந்தை
உறவுகள் நண்பர்கள்
ஊரில் அனைவரும்
அப்படியே இருந்தனர்.
ஆனால்...
காதலித்தவள் மட்டும்
மனைவியாகியிருந்தாள்
இன்னொருவனுக்கு

முன்பெல்லாம்
மல்லிகைப்பூச்சூடி
தெல்லிப்பழை துர்க்கையம்மன்
தேரேறி வருவதுபோல்
கல்லூரிக்கு வரும்
சௌந்தர்ய நாயகி.



அழகும் அறிவும்
அன்பும் நிறைந்திருக்கும்
அதிசய காதலி.

இப்படி
வெகுமதியாய் இருந்தவள்
இன்று இன்னொருவன்
திருமதியாய் மாறியிருந்தாள்

அவளின் தவறில்லையென்று
அவனுக்கும் தெரியும்.

நடவுசெய்த காதலை
பதிவுசெய்ய முடியாமல்
பாழடித்தது விதி.

கண்களும் உணர்வுகளும்
பரிமாறிய காதலை அன்று
பேச்சிலும் எழுத்திலும்
பிரேரிக்க முடியவில்லை

இடையில்
காய்நகர்த்தி விடுகிறது
காலம்

அவனை
தொடர்பு எல்லைக்குவெளியே
துரத்தியது விதி.

“அந்த” இருவருக்கும்
நடந்த யுத்தத்தில்
இந்த இருவருக்கும்
இடைவெளி விழுந்தது.



காதலென்ன காணியுறுதியா
எழுதிவைப்பதற்கென்று
அவன் நினைத்தான்


காத்திருக்கச் சொல்லாமல்
காணாமல் போனவனை
பார்த்திருந்து என்ன
பயனென்று அவள்நினைத்தாள்

காலக்குளறுபடியில்
களவுபோனது
புனிதக்காதல்
போரின் புழுதிக்குள்

இன்று...
இன்னொருவனை
மணந்த கடனுக்காய்
வாழும்
சராசரிகளில் ஒருத்தியாய்
அவள்.

வீரமும் தோற்று
காதலும் தோற்று
யாருமற்றவனாய்
வீதியில் அவன்

அட
போருக்குள் புதைந்தவை
இப்படி எத்தனை...?



# கவிதை தொழிற்சாலை

இங்கு ஒரு
கவிதைத்தொழிற்சாலை
இருந்தது

உணர்வுத்திருவிளக்கின்
வெளிச்சத்தில்
ஊர்மடியில்
ஆனந்தக்கூத்தாடி
அன்றாடம் மகிழ்ந்தபடி
கலகலப்பாயிருந்த
கவிதைத்தொழிற்சாலையது

அங்கு
கவிஞர்கள் பலர்சேர்ந்து
கடும் உழைப்புசிந்தி
கவிதை நெம்புகோலொன்றை
கச்சிதமாய் தயாரித்தார்கள்

தம் முதுசத்தின்
முதுகுக்கூனலை
நிட்சயம் அது
நிமிர்த்துமென்று
நம்பியிருந்தார்கள்

துரதிருஷ்டம்
நிமிர்த்தும்
அவசரத்தில்
அவர்களே அதை
உடைத்து விட்டார்கள்

இன்றும்
கவிதை தொழிற்சாலை
இருக்கிறது
கவிஞர்கள்தான்
யாருமில்லை

சிலர்
முகவரிகளை ஒளித்துவைத்து
முடங்கிப்போனார்கள்

சிலர்
காதல்பாட்டுகளின்
காற்சலங்கைகளுக்கு
எண்ணெய்தடவுகிறார்கள்

சிலர்
நெம்புகோல் முறிந்ததற்கு
நித்தம் நித்தம்
விழாஎடுக்கிறார்கள்

சிலர்
என்னசெய்வதென்று
இன்னமும் யோசிக்கிறார்கள்

ஆனால்
மற்றும் பலர்
என்ன ஆனார்கள்..?



# கடவுளின் பிள்ளை

எவ்வளவு பேர் இருந்தும்
யாருமில்லாத
வெறுமை

என்னை புரிந்து
பாசமாய் பழக
எவரும் இல்லையென்ற
ஏக்கம்

ஓய்வு நேரமெல்லாம்
மூளையை குடைகிறது
இனம்புரியா
ஒருவித ரணம்

ஆறுதல் படுத்த
உறவொன்றில்லாமல்
மௌனித்துவிட்டது
ஆழ்மனது

எட்டிப்பார்க்கும்
கண்ணீரை
தட்டிவிட
எந்தமுயற்சி செய்தும்
பலனில்லை

எனக்கு மட்டுமே
ஏன் இப்படி?
தெரியவில்லை

எதிர்காலம்பற்றிய
கனவில்
பரந்த வெளிமட்டுமே
தெரிகிறதே
என்னை திசை
மாற்றியது எது?
புரியவில்லை


இப்போது பயணம்
சரியா?
சத்தியமாய் அறியவில்லை


இனி என்ன
செய்யப்போகிறேன்?
இக்கேள்விக்கு விடையில்லை

எனக்கான சந்தோசம்
என் கவிதைகளில்
மட்டுதானா?

எண்ணங்களாய் கரைந்தே
வாழ்வு முடிந்திடுமா?

எவரிடம் கேட்பது
எல்லோரும் பரபரப்பாய்
இவ்வுலகில்





ஒவ்வொருநாளாய்
உலகை நான்
புரிந்து கொள்கிறேன்
என்னைப்புரிந்துகொள்ளத்தான்
எவருக்கு நேரம்?

பரஸ்பர பரிமாற்றம்தானே
அன்பும் வாழ்வும்
எனக்குமட்டுமேன்
ஒருவழிப்பாதையாய்?

உயிர் இருந்தும்
அனாதைப்பிணமான
எனக்கு
கிடைக்குமா இனி
வாழ ஒரு சந்தர்ப்பம்

திட்டுத்திட்டான
கவலைகளுடன்
பட்டுப்போன மரமா
நான் ?


வாசித்து முடிக்கப்படுகிறதா
என் வாழ்க்கை
புத்தகம் ?

இந்தப் பாறையிலும்
இனிவிழுமா
ஒரு சின்னப்பனித்துளி
இல்லை இதுதானா
என் அத்தியாயத்தின்
முற்றுப்புள்ளி ?

இல்லவே இல்லை!!!
இன்னும் என்
உயிரில்
ஒட்டிக்கொண்டுதானிருக்கிறது
ஒரு சொட்டு நம்பிக்கை

நானும்
வாழ்வேன்
உயர்வேன்

ஏன் தெரியுமா
நான் கடவுளின் பிள்ளை.





# உயிர்ப்பாடல்

ஈரக்காற்றில் எழுந்துவருகிறது
பொங்கும் அந்த
தாய்மையின் தாலாட்டு

உடற்கலங்கள் அனைத்தையும்
சில்லிட வைக்கும்
தேசிய கீதம்தானே
அந்த திருப்பாடல்


உணர்வுகள் பிழிந்த
சாறின் பதிகம்
உயிருக்குள் உற்பவிக்கும்
உன்னத புனிதம்
இந்த கருவறைப்பாடல்



பிரபஞ்சம் நிறைந்த
பெருவெளியில்
நுண்ணதிர்வுகளை
நூலில் கோர்த்த
நீலாம்பரி ராகத்தின்
கீதம்தானே இது


அதிகாலை திருவெம்பாவாய்
அடிமனசைப்பிசையும்
அதிசயகானம்

ஆராரோ என தொடங்கி
பீறிடும் அந்த
உணர்ச்சிக்குழம்பின் உள்ளே
ஆழ்மனசை அரவணைக்கும்
அற்புதம்தான் என்ன?



உற்சாகம்தருகின்ற
ஓங்கார பிரணவமாய்
எப்பொதும்
உள்ளுணர்வில்
ஒலிக்கின்ற வேதமிது

காலக்கரைசலுக்குள்
வயசு கரைந்தாலும்
தாய்மைக் கருவூலத்தின்
வாய்ப்பாடே இதுதானே



ஓ!
அந்த பரிசுத்த பாடல்தானே
ஜீவிதத்தின்
முக்திப்பேற்றுக்கான
முதல்படி

என்
ஆசை அம்மா!
எனக்காகவும்
நீ
இதைப்பாடியிருந்தாயா?



# பாலைவனத்தில் பௌர்ணமி

எல்லாப்பக்கங்களிலும்
எந்தக்குறிப்புமின்றி
வெறுமையாய் கடக்கிறது
நாட்காட்டிநாளாந்தம்


கண்ணீர் பூக்கும்
கள்ளிச் செடியாய்
வெந்நீரில் குளிக்கிறது
இதயம்

அனுபவங்கள் அனைத்துமே
துயரமூட்டைகளை சுமந்த
கழுதையின் கனைப்புகளாய்
கரைந்தே போயின

பச்சையமே இல்லாமல்
பட்டுப்போகும்
என் உயிருக்குள்
திடீரென
ஒளிச்சேர்க்கையை
உற்பத்தி செய்தது
ஒற்றை நிலா

தினுசு தினுசாய்
திரண்டன
கலர் கலர்
கனவுகள்

சத்தமில்லாமல்
மனக்கதவு திறந்து
உள்நுழைந்து கொண்டது
ஒரு காதல்.




# அனுபவம்

இப்போதெல்லாம்
தட்டில் விழும்
கறிவேப்பிலைகள்
அனைத்தையும்
கவனமுடன்
சாப்பிடுகிறேன்

அது
கண்ணுக்கு நல்லது
என்பதால் மட்டுமல்ல

வாழ்வில் பலர்
என்னை தூக்கி
எறிந்ததைப்போல்
நான் யாரையும்
தூக்கி எறியக்கூடாது
எனும்
கவனத்திற்காகவும்தான்.



# சமூகம்

வீட்டுக்கு வீடு
தவறுகளை
நிரப்பிவைத்துக்கொண்டு
வீதிக்கு தார்போட்டது
சரியில்லையென்று
விசனப்படுபவர்கள்.



## பயணம்

எத்தனை
காதல் ரயில்கள்
என்னை கடந்துவிட்டன
இன்னும் ஏன்
தண்டவாள கரையிலேயே
நிற்கிறேன்
நான்.




# பாவப்பட்டவன்

ஊற்றுக்கண்
அடைத்து
தூர்ந்துபோய்க்கிடக்கிறது
கவிதைக்கிணறு

மைதீர்ந்த எழுதுகோல்
மாரடிக்கிறது

அனுபவங்கள்
புரட்டிப்போட்ட
பழையகாகிதமாய்
ஒரு ஆத்மா.





# காதல் ஜீவன்

எதற்கெடுத்தாலும்
எடுத்தெறிந்து
பேசுவாள்
காதலிக்கும் போது..

எதையாவது
எடுத்தெறிந்து
பேசுகிறாள்
கல்யாணத்துக்கு பிறகு..

சொற்களால் பேசினால்
சும்மாயிருக்கலாம்
பொருட்களால் பேசினால்..

கையை
ஓங்கச்சொல்கிறது
கோபம்..

கட்டுப்படுத்தி
விட்டுக்கொடுக்கிறது
காதல்.




# புறக்கணிப்பு

அட
என் எழுதுகோலுக்கு
என்ன நடந்தது

நான்
எவைகளை இனி
எழுதக்கூடாதென்று
முடிவு செய்தேனோ
அவைகளையே
எழுதிக்கொண்டிருக்கிறதே

இப்படியே
எத்தனை கவிதைகளை
எழுதிக்கசக்கி
எறிந்திருப்பேன்

காலம்
என்னைக்கசக்கி
வீதியில்
எறிந்ததைப் போல.




# பணம்

திமிர் பிடித்திருந்தால்
சிலவேளை
ஒருவன்
திருந்திக்கொள்ளலாம்

மதம் பிடித்திருந்தால்
சிலவேளை
ஒருவன்
மன்னிக்கப்படலாம்

சினம் பிடித்திருந்தால்
சிலவேளை
ஒருவன்
சிந்தித்துதெளியலாம்





புகழ் பிடித்தலைந்தால்
சிலவேளை
ஒருவன்
புரிந்துகொள்ளலாம்

கேவலம்
பணம் பிடித்தலைந்தால்
அவன் பரம்பரைக்கே
அது அழிவாகும்

பணம்
நல்லவனிடமிருந்து
நல்லவைகள்
நாலு நடத்தும்

கெட்டவனிடமிருந்து
கெட்டவைகள்
ஆயிரம் நடத்தும்.





# ஒரு கல் கடவுளாகிறது

ஊர்கூடி ஒன்றாக
உருவாக்கிய ஆலயத்தில்
பேர்சொல்லும் படியாக
நடக்கிறது குடமுழுக்கு

குருக்களை அழைத்து
குறிப்புகள் வாங்கி
கணபதி ஆராதனையுடன்
கைங்கர்யங்கள் ஆரம்பம்

சகலதோஷம் நீங்க
சாந்திகள் செய்து
சுற்றுசூழலெல்லாம்
சுகப்படுத்தப்படுகின்றன

புனித மண்ணெடுத்து
பாலிகை போட்டு
யக்ஞும் செய்வதற்காய்
யாகங்கள் அமைத்து
கங்கை நீரெடுத்து
கலசங்களில் நிரப்பி
பூரணகும்பங்களை
பொருத்தமாய் வைத்து
ஆகம வழியினிலே
அனைத்தும் நிகழ்கிறது




சூரியச் சுடரில்
அக்கினி எடுத்து
குண்டங்கள் தோறும்
ஹோமங்கள் நடக்கிறது

கும்ப பூஜைகளில்
கொடுக்கின்ற ஆகுதிகளில்
ஐம்பூதங்களிலிருந்தும்
ஆன்மிகம் திரள்கிறது

மகோன்னத மந்திரங்கள்
உச்சரிக்க உச்சரிக்க
அக்கினியை தூதாக்கி
ஆகுதிகள் சேர்க்க சேர்க்க
பிரதான கும்பத்தில்
பெருந்தெய்வ சக்திகள்
பிரவாகிக்க தொடங்கிறது

நீண்ட மந்திரங்கள்
றைவான கிரியைகளால்
ண்டவன் ஆற்றலை
வண்டியளவு உள்வாங்கி
ற்றிருக்கின்றது
ிரதான கும்பம்





வேதபாராயணம்
தேவார திருமுறைகள்
நாத கீதங்கள்
நல்லடியார் திருக்கூட்டம்
யாவும் சேரச்சேர
மேவி வளர்கிறது
மேலான அருட்சக்தி

கல்லில் வடித்த
கடவுள் சிலைக்கு
கண்கள் திறந்து
கற்பூர ஆராத்தி

தான்யாதி வாசம்
சயனாரோகணம்
மேன்மைப்படுத்தி
மிளிர்கிறது கருங்கல்

திசைகள் ஒளிரும்
திருவிளக்கு பூஜை






ஆசனக்கல்லில்
மந்திரம் கலந்த
யந்திரம் வைத்து
மங்கலப் பொருட்களும்
அதனுடன் சேர்த்து
நூதன மூர்த்தியை
பிரதிஷ்டை செய்து
மருந்து சாத்தி
மகிமைப் படுத்தி
அரும்பொருள் தன்மை
அளிக்கப்படுகிறது

எல்லோரும் செய்யும்
எண்ணெய்க்காப்பில்
வல்லமைச்சக்தி
வரவேற்கப்படுகிறது

யாக பூசைகள்
ஆகிட ஆகிட
பாகம் பாகமாய்
பலம்பெறும் பக்தி

கோபுரம் தூபிகள்
குதூகல அபிஷேகம்
யாவரும் திரண்டிருக்க
யாககும்பம் வீதிவலம்





சுபமுகூர்த்த வேளையில்
தவம்நிறைந்த தருணங்களாய்
கருவறைக்குள் நுழைகிறது
பிரதான கும்பம்
அடியவர்கள் விழிகசிய
அரோகரா ஒலிமுழங்க
ஆவாகனம் நடக்கிறது


தேங்காய் உடைத்து
தீபம்காட்டி
ஓங்காரம் ஒலிக்க
உயர்த்தி சரிக்கிறார்
கும்பத்தை குருக்கள்

மந்திர நீர் வழிய
மங்கலம்தான் பொழிய
நம்பிக்கையோடு
பக்தர்கள் வணங்க
பிம்பத்தில் வந்து
அமர்கிறார் கடவுள்

மந்திர சக்தியும்
மகோன்னத பக்தியும்
நம்பிக்கையுடன் சேர
நடப்பதே குடமுழுக்கு

சும்மாயிருந்த கல்
இப்போ
கடவுளாகியிருக்கிறது

சுழன்றுதிரியும் மனிதா!
நீ எப்போ
மனிதனாயாவது
ஆகப்போகிறாய்...?



# வரம்

கடவுள்
என்முன் தோன்றி
ஒரேஒரு வரம்தந்தால்

அடிக்கடி அருகில்வந்து
வரம்தர வேண்டுமென்ற
ஒற்றை வரத்தையே
உறுதியாய் கேட்பேன்


நாட்டில்
திருத்தப்பட வேண்டியவைகள்
நிறையவே இருக்கின்றன.

# சகுனம்

வீதிவிபத்தில்
இறந்து கிடக்கிறது
எதிர்வீட்டுப் பூனை

புறப்படும் நேரமெல்லாம்
குறுக்காலே போனதால்தான்
பிழைப்பு நடக்கவில்லையென்று
நான்
பிழைசொன்ன பூனையிது
இப்போ
பிணமாகக்கிடக்கிறது

வெள்ளை வெளேரென்ற
வெண்பஞ்சு முகிலாய்
கொள்ளை அழகுதான்...






பாவம்
என் திட்டு பலிச்சதுவோ?
இல்லை
கண்பட்டுப்போனதுவோ?

என்குறுக்கே பூனையா
இல்லை
பூனையின்குறுக்கே நானா?

முதல்முறையாய் எழுகிறது
எனக்குள் ஒரு பட்டிமன்றம்

காரணம்
இனிஎனக்குவரும்
தோல்விகளுக்கு
நான்
யாரைத்திட்ட?




# இரண்டாம் உயிர்


ஒற்றை உயிர்மட்டும்
போதாது வாழ்வதற்கு
இரண்டாம் உயிராக
இனிவேண்டும் **"நம்பிக்கை"**

தற்கொலைக்கணக்கெடுப்பு
தருகின்ற பாடமிது

அற்பவிசயங்களையே
ஜீரணிக்க வலுவின்றி
அல்லாடிக்கொண்டிருக்கிறது
அவனியில் மனிதம்

பிரச்சனையே இல்லாதவர்
எவருமில்லை என்றாலும்
தனக்குமட்டும் இப்படியென்ற
தவறான கருத்தோட்டம்

ஒற்றை உயிர்மட்டும்
போதாது வாழ்வதற்கு
இரண்டாம் உயிராக
இனிவேண்டும் **"நம்பிக்கை"**



முகத்தில் பருவந்தால்
கற்பிழந்து போனதாய்
கவலைப்படும் கன்னி..

பரீட்சையில் தோற்றதால்
பட்டுப்போகும் மாணவன்..


மழையில்லையென்று
மனங்குழம்பும் விவசாயி..

வேலை கிடைக்காமல்
வெந்துபோகும் பட்டதாரி..

வரன் அமையவில்லையென்று
வாடுகின்ற பெற்றோர்கள்..
காதல் தோற்றுவிட்ட
கடுப்பில் கட்டழகி..

பாடத்திட்டம் முடிக்காமல்
முழிபிதுங்கும் ஆசிரியர்..

ஊதியம் கிடைக்காமல்
உருக்குலையும் ஊழியர்கள்..
விலையேறும் எரிபொருளால்
வெறுப்படையும் சாரதிகள்..



கலப்படப் பெருக்கத்தால்
கவலைப்படும் நுகர்வோர்கள்..

வழக்குகளை முடிக்காமல்
வதைக்கின்ற மன்றங்கள்..


பேஸ்புக்கின் பாவனையால்
பேதலிக்கும் மனசுகள்..

ஓடாத படங்களால்
உடைந்துபோகும் ரசிகர்கள்..

கலிகாலம் இதுவென்று
கருத்தாடும் ஊடகங்கள்..

ஒற்றை உயிர்மட்டும்
போதாது வாழ்வதற்கு
இரண்டாம் உயிராக
இனிவேண்டும் **"நம்பிக்கை"**






# சந்தோஷம்

என்னை ஏன்
விமர்சிக்கிறீர்கள்?

புரிகிறது...

எழுதுவதெல்லாம்
வாழ்க்கையில்
நடந்து விடாதுதான்
எனக்கு புரிகிறது

சரி விடுங்கள்
எழுதும் போதாவது
நான்
சந்தோஷமாய்
இருந்துவிட்டு போகிறேனே.




# கவனம்

வாழ்வில்
நிமிஷங்கள்தோறும்
அனைத்திலும்
கவனமுடனேயே
கழிக்க வேண்டியிருக்கிறது
அழகான பெண்ணைப்பெற்ற
அப்பா மாதிரி

நான் எவளவு கவனம்
என்பதல்ல பிரச்சனை
எதிரில் வருபவனின்
கவனயீனமும்
கணிக்கிறது வீதிவிபத்தை

கலகலப்பாய் பேசுவார்கள்
எல்லோரும்
நான் கதைக்கும்போதுமட்டும்
காணாமல் போகும்
கவரேஜ்




குடை மறந்து
நடையைக்கட்டினால்
கட்டாயம் வரும்
மழை

இரண்டு சீட்டில்
ஒன்றை எடுத்தேன்
எடுக்காததுக்கு விழுந்தது
அதிகூஷ்டம் ஒருகோடி

நான்
ஓடர் கொடுக்கும்போது
மட்டும்
கடையில் தீர்ந்திருக்கும்
கொத்துரொட்டி

சிந்தாமல் சிதறாமல்
வந்துசேரும்
பழுதான கச்சான்கள்
பக்குவமாய் வாய்க்குள்



ஆசையாய் மச் பார்க்க
ரீ வி முன்னமர்ந்தால்
பேசியே அறுக்கவரும்
பெரிசுகள்

தலையில் தண்ணீரை
ஊற்றிய பின்பு
திறந்து பார்த்தால்
தீர்ந்திருக்கும் ஷம்போ

கவனம் என்பது
கண்களில் இல்லை
அறிவும் பழக்கமும்
இணைந்ததே கவனம்

கவனம்!!!
முகூர்த்த நேரத்தில்
முன்னிற்கவேண்டும்
மாப்பிள்ளை

தாமதமாகி...
முதலிரவு முடியப்போய்
வருந்துவதால் பயனில்லை.



# ஆயா வளர்க்கும் பிள்ளை!

ஏ ஆர் ரஹ்மானின்
இறுவெட்டுகள் கேட்டே
தூக்கம் கொள்கிறேன்
தினமும்

பூமிக்கு வந்ததுமுதல்
நான் அதிகம்
பார்த்துக்கொண்டிருப்பது
தொலைக்காட்சி மட்டும்தான்

அம்மா முகம்கூட
அவ்வளவாய் ஞாபகமில்லை

பசிக்கும் முன்பே
சாப்பாடு
பலப்பல விதமாய்
ஊட்டச்சத்து
காலம் தவறாத
குளிப்பு முழுக்கு
சுத்தம் சுகாதாரம்
அத்தனை பக்குவம்



ஆனால்
பாசத்தை பரிமாற
யாருக்கும் நேரமில்லை

ரீ வி
பிறிஜ்
வோசிங்மெஷின்
கிறைண்டர்
இவைகளுடன்
ஒன்றாய் நானும்..

வேலைக்குப்போகும்
அம்மா அப்பாவிற்கு
உண்மையில் நான்
வேண்டா விருந்தாளி

அவர்களின்
தாய்தந்தை அந்தஸ்திற்கான
கௌரவத்துக்காய் மட்டும்
வளர்க்கப்படும் வஸ்து நான்

எங்கள் வீட்டில்
எல்லாம் உண்டு
அன்பைத்தவிர

ஏசி
மின்விசிறி
ஏகப்பட்டவைகள்

அன்பாய்
தலைகோதிவிட
தாயின் விரல்களுக்குத்தான்
நேரமில்லை



அட
அப்பாவிற்கு
சிரிக்கவும் தெரியுமா?
கல்யாண போட்டோ
பார்த்ததில்
கண்டெடுத்த கேள்வியிது

ஓடிஓடி உழைக்கிறார்கள்
என்னை பெற்றவர்கள்
பிள்ளை என்னைப்
பெரிதாய் வாழவைக்கவாம்

வம்சத்தின் வித்துஎன்னை
வாஞ்சையாய் வளர்ப்பதைவிட்டு
வருங்காலத்தேவைக்காய்
வங்கிக்கணக்கை வளர்க்கிறார்கள்

பெயரின் முதலெழுத்தாய்
மட்டும் அப்பா

பிறந்தநாள் விழாக்களில்
படத்திற்காய் மட்டும்
முத்தமிடும் அம்மா

அம்மிகூட
தன்குழவியை
எப்போதும் பிரிந்ததில்லை
என்
மம்மி மட்டும்
எனை அணைப்பதேயில்லை

ஆனாலும்
ஆண்டவன் அருளால்
எனக்கு கிடைத்தாள்
ஒரு ஆயா

ஆம்
ஆயாவின் வளர்ப்புப்பிள்ளை
நான்.





# சில கவிஞர்களும் நாமும்...

“காணி நிலம் வேண்டும்”
சொன்னீர்களே **மகாகவிபாரதி!**
அது உங்களுக்கே சொந்தமெனும்
உரிமை
அத்தாட்சிப்பத்திரத்தை
ஏன் நீங்கள்
வாங்கி வைத்திருக்கவில்லை

இப்போ
பல விசயங்களுக்கு
பத்திரம் வேண்டும்
சில விசயங்களில்
மிகப்பத்திரமாய்...
இருக்கத்தெரிய வேண்டும்.
...


“நான் படைப்பதனால்
என்பேர் இறைவன்”
என்று சொல்லி
கவிஞர்களுக்கும்
கடவுள் அந்தஸ்து
பெற்றுத்தந்தீர்களே
**கவியரசர் கண்ணதாசன் !**

இப்பொழுதோ
கடவுள் சிலைகளும்
களவாடப்படுகின்றனவே
...

“படைப்பே இவ்வளவு
அழகென்றால்
படைத்தவன் எவ்வளவு
அழகாயிருப்பான்”
பக்குவமாய் சொன்னீர்களே
கவிக்கோ
**அப்துல்ரகுமான்!**

அழகிய படைப்புகள்
பலவற்றை
இந்த பாழாய்போன மனிதன்
அழுக்குப்படுத்தி
வருகிறானே.
...
“தலையை சீவியவனுக்கே
தண்ணீர் தருகிறதே
இளநீர்”
தத்துவக்கவிதை
தந்தீர்களே
வாலிபக்கவிஞர்
**வாலி ஐயா !**

அதுசரி
குரும்பைகளையும்
சீவுகிறார்களே
...






"தாயின் மார்பகம்
அறுக்கப்படுவது கண்டு
அஞ்சியோடிய குழந்தை
தகப்பனின் மண்டையோட்டில்
தடுக்கிவிழுந்ததாம்"
பலஆண்டுகளுக்குமுன்பே
பாடியிருந்தீர்களே
**கவிப்பேரரசு வைரமுத்து !**

பின்னாட்களில்
வந்துவிட்டதாமே
மின்சாரச்சுடுகாடு.
...
"இரண்டடி கொடுத்தால்தான்
திருந்துவாய்
வாங்கிக்கொள்
வள்ளுவனிடம்"
வம்சம் மீதான
வாஞ்சையில்
வரிஎழுதிவைத்தீர்களே
அன்பு அண்ணன்
**கவிஞர் அறிவுமதி !**

பலஅடிகள் வாங்கியும்
இன்னும் திருந்தவில்லையே
நாம்.
...


"கடவுளுடன் சீட்டாடுவது
கொஞ்சம் கடினமானது
எவ்வளவு கவனமாயிருந்தாலும்
பார்க்காமலே அறிந்துகொள்கிறார்"
இயல்பாய் இயம்பினீர்களே
**கவிஞர் நா. முத்துக்குமார் !**




நாம்தான்
சீட்டுக்கட்டுகளையே
தொலைத்துவிட்டோமே.
...

கௌரவத்துக்குரிய
கவிஞர் பரம்பரையே!
உங்கள்
கவிதைகள் படித்தும்
நாம்
திருந்தவில்லையென்றால்

மன்னிக்கவும்
எனக்கு
சொல்லத்தெரியவில்லை.





# முதல்ராத்திரி

காலைஆறுமணி
கண்விழித்த போதே
புரிந்துகொண்டேன்
நீ கோயிலுக்கு போயிருப்பாய்..

படுக்கை விரிப்பின்
மெல்லிய உஷ்ணம்
மனதிற்கு இதமாய்

பக்கத்து
தலையணையை
பார்க்கிறேன்

உன்
சிறப்பம்சங்களில்
ஒன்றான
நீளக்கூந்தலின்
ஒற்றைமுடிச்சுருள்
ஒய்யாரமாய் கிடந்தது



கையில் எடுத்தபோதே
நெஞ்சுள்
ஆனந்தப் பிரவாகம்

நேற்றைய இரவு
இதயத்தில்
பூமலர்த்தியது

தோளோடு தோள்
அணைத்தபடி
கனவுக்குள் இருந்து
வாழ்க்கைக்கு
வலைவீசிக்கொண்டிருந்தோம்

என்ன
நிர்மலமான
ராப்பொழுது

திருமணமாகி
இத்தனை நாட்களின்பின்
நேற்றுத்தானே
அது சாத்தியமானது

உண்மைதானடி
உடலுறவு எனும்
இயந்திர இயக்கமில்லாமல்
உற்சாகமாய் பேசியபடியே
தூங்கிப்போன
முதல் ராத்திரி
நேற்றுத்தானே
நமக்கு வாய்த்தது

அடடே!
நான்
குளித்து தயாராக
வேண்டும்
கோயில் பிரசாதத்துடன்
நீ வரும்
அழகை காண.





# நம்பியிரு என் நண்பா நல்லகாலம் பிறக்குமடா...

செல்லரித்த பழங்கதைகளை
சீக்கிரமே மறந்துவிடு
நல்லவனாய் நீயிருந்தால்
நன்மையென உணர்ந்துவிடு
சொல்பவர்கள் சொல்லட்டும்
சும்மாகேட்டு கடத்திவிடு
நம்பியிரு என்நண்பா
நல்லகாலம் பிறக்குமடா.

இன்பதுன்பம் இவையிரண்டும்
இருந்திருந்து வருவதுதான்
அன்பினையே மதித்துநின்றால்
அகிலமெல்லாம் உன்னதுதான்
சின்னதெனும் விதைக்குள்தான்
ஆலமரம் ஒளிந்திருக்கும்
நம்பியிரு என்நண்பா
நல்லகாலம் பிறக்குமடா.

தொடர்கதையாய் தோல்விகளும்
தொடரட்டும் தொடரட்டும்
இடர்நிரம்பி இப்போதும்
இடைத்தடங்கல் நிகழ்த்தட்டும்
படர்கின்ற கொடிபோல
பற்றட்டும் உன்முயற்சி
நம்பியிரு என்நண்பா
நல்லகாலம் பிறக்குமடா.





காசுபணம் இல்லையென்று
தாழ்வுநிலை வரும்போதும்
ஆசையேதும் நிறைவேறா
அவலம்வந்து தொடும்போதும்
மூசுமலை போல்நின்று
முன்னோக்கும் மனம்வேண்டும்
நம்பியிரு என்நண்பா
நல்லகாலம் பிறக்குமடா.

இழந்தவைகள் எண்ணிஎண்ணி
வருந்தவேண்டாம் விட்டுவிடு
எழுந்துநிற்க முடியுமென்று
எப்பொழுதும் உறுதியெடு
பொழிந்துவிடும் மழையினிலும்
புல்வளைந்து பின்நிமிரும்
நம்பியிரு என்நண்பா
நல்லகாலம் பிறக்குமடா

ஆயிரம் பேர்வந்து
அறிவுரைகள் தந்தாலும்
நீயொருவன் தான்நின்று
நிகழ்த்தவேண்டும் சாதனைகள்
தேயிற பிறைநிலவும்
திரும்பவும்தான் வளர்கிறதே
நம்பியிரு என்நண்பா
நல்லகாலம் பிறக்குமடா.

# அமுதாவும் காரும்!

பதினெட்டு ஆண்டுகளின்பின்
கண்டேன் அவளை
கொழும்பு வீதியில்


அமுதா!!!

கூடியிருந்தது வயது
கூடவே அழகும்தான்

குங்குமப்பொட்டு
குடும்பத்தை உணர்த்தியது

கறுத்த ஜீன்ஸ்
ரீ ஷேட்

அதிகமான
வெள்ளவத்தை
தமிழ்குடும்ப
பெண்களைப்போலவே
இவளும்
கடையில் சாப்பாடுவாங்கி
காரில் ஏறும்போது
கண்ணில் விழுந்தாள்
...



மருளும் கறுத்த
உருண்டைக்கண்கள்
மல்லிகைப்பூ நிறம்
கழுத்தோரம் மின்னும்
ஒரு மச்சம்
சொல்வழிகேட்கும்
கூந்தலும்
குழப்படி செய்யும்
காது ஜிமிக்கியுமாய்
அன்று...

பள்ளிக்கூட
பின்வாங்கில்
வருவதும் போவதும்
தெரியாமல்

எல்லாப்பரீட்சைகளை
சேர்த்தாலும்
நூறுகூட தேறாதவள்

நல்லவள்தான்
ஆனால்
அவளிடம்
கடைசிவரை
கடைக்கண் பார்வைகூட
காட்டவில்லை
சரஸ்வதித்தாய்

வகுப்பேறிக்கொண்டு
இருந்தாள்
படிப்பேறாமலே



பரிசளிப்பு விழாவில்
பட்டிமன்றங்களில்
கைதட்ட மட்டும்
கலந்து கொள்வாள்

ஆசிரியர்களின்
கேள்விகளுக்கு
அழகாய் நான்
பதில்சொல்ல
அதிசய ஜந்துவாய்
என்னைப்பார்ப்பவள்
அவளவுதான்

காலமும்
கல்வியும்
கைவிட்டிருந்தன
அவளை அன்று

அதற்காய்
கண்ணீர் விடும்
ஜாதியாய்
அவளிருந்ததில்லை



இன்று
அமுதா காரில்
ஏசியில்

என்னை நினைவில்லை
அவளுக்கு

நான்
தெருவில்
தூசியில்

படிப்பை தீர்மானித்தவர்கள்
நாங்கள்
எங்களை தீர்மானித்தது
எது?



# ஒரு கோரிக்கை

கொடுத்து வைத்தது
இந்தக் காற்றுமண்டலம்
பல கவிஞர்களது
சுவாசங்களை
தன்னுள் வைத்திருக்கிறதே

ஓ
இனிய வாயுதேவா!
என் வணக்கங்களை
ஏற்றிடுங்கள்

ஷெல்லி
பைரன்
ஜோன்மில்ரன்
பப்லோ நெருடா


ஏன்
எங்கள் பாரதி

இப்படி
எத்தனையோ
கவிஞர்களின்
மூச்சுக்காற்றுகளை
பத்திரப்படுத்தியிருக்கும்
பரம்பொருளே!

இந்தவரிசையில்
அடுத்த ஆசனத்தில்
அமரவேண்டிய
ஆதர்ச கவிஞன்
எங்கேயென்று
சொல்வீர்களா?

சாயப்பூச்சுகளின்றி
ஒப்பனைகளின்றி
இருப்பது
வெண்பஞ்சுத்தலை மட்டுமல்ல
அவரின்
வெள்ளை இதயமும்தானே

என் மண்டையில்குட்டி
மனசை நிமிர்த்திய
மோதிர விரலுக்கும்
கவிதைகளுக்கு
சுரம்பிரிக்க
கற்றுத்தந்த
சுண்டுவிரலுக்கும்
சொந்தக்காரர்




எங்கும் இருக்கும்
காற்றின் தேவா!
உங்களுக்கே
எல்லாம் தெரியும்

சொல்லுங்கள்...

“காலம் ஒருநாள் என்னை
கீழே போடும்
அப்போது என்
கவிதைகளுக்குமான தேவைகளும்
தீர்ந்து போயிருக்கும்”
என்றாரே

உண்மை சொல்லுங்கள்
காலமா தவறுசெய்தது?...






# தீர்மானம்

இப்போதெல்லாம்
தினமும்
ஒரு கவிதையாவது
எழுதாமல்
என்னால் தூங்கமுடிவதில்லை

எனக்குள்
ஒரு குழப்பம்


கவிதை
எழுதுவதை
நான் தீர்மானிக்கிறேனா?

இல்லை
என்மூலம் வெளிப்பட
கவிதை
என்னைத்தீர்மானித்து
வைத்திருக்கிறதா?



## பசி

உன் எத்தனை
முத்தங்களை
தின்றுவிட்டேன்
இன்னும்
அடங்கவில்லையே
உதடுகளின் பசி.



# பாடுபொருள்

இன்று
படைப்பாளர்கள்
பெருகிவிட்டார்கள்
பாவம்
பாடுபொருள்தான்
அவசரசிகிச்சைபிரிவில்

காலப்பெருவெளியின்
கலவரத்தில்
மூலப்பொருளை
சிதிலப்படுத்தி நிற்கிறது
படைப்புலகம்

உண்மை விரல்களுக்கு
இப்போ துடக்கு

இடைவெளியை
ஈடுசெய்வதாய்
சிலேற்று கவிஞர்கள்
சிறப்பு பெறுகிறார்கள்

பொய்சொல்வதும்
புதியவருகைகளும்
கவிதையில் தவறில்லை
அதற்காய்
விபச்சாரத்தின் ஒத்தசொல்
விருந்தென்றால்...?



முகப்புத்தகத்தில்
மூன்றுவரி எழுதிவிட்டால்
ஜகத்திற்கே பாரதியெனும்
ஜெகதலப்பிரதாபம்

பாவம்
வாசித்து வாசித்து
வாசகர்களும்
வாக்காளராகிவிட்டார்கள்

அப்போ
தொடர்பு எல்லைக்கு
வெளியே
இருந்தவர்கள் கூட
உபயகாரர்களென்று
உரிமை கோருகிறார்கள்

கவசகுண்டலம்
பறிக்கப்பட்ட
கர்ணன்களாய்
இன்று
காலக்கவிஞர்கள் பலர்
ஊனப்பட்டு போனார்கள்

இந்தச்சந்தடியின்
இடுக்கில்
என்னசெய்வதென்று
தெரியாமல்
படுத்துக்கிடக்கிறது
பாடுபொருள்.


# பாசத்தின் வலிமை

கனகாலங்களின் பின்
கடிதமொன்று கிடைத்தது
ஆசை அண்ணனிடமிருந்து

சகோதர பாசமென்னும்
சங்கீத ஸ்வரங்களால்
சுருதி சேர்க்கிறது
சொந்த உறவொன்று

அண்ணா!
உங்கள்
அக்கறை அலைவரிசையில்
சீராகியது
இதயத்துடிப்பு
வார்த்தைகளின் வலையமைப்பில்
நேராகியது
மனசின்வெடிப்பு

வாழ்வின் பயணத்தில்
ஆயிரம் வளைவுகள்
வாழ்வை படித்தவனுக்கு
எல்லாமே அழகுகள்.





## நாட்டியம்

நீ
நடனமாடும் போது
பேசும் கண்களுக்கும்
நீ
பேசும் போது
நடனமாடும் கைகளுக்கும்
அதிகவித்தியாசம்
தெரியவில்லை
எனக்கு.

# என்கவிதை

கனவுக்குள் பொத்திவைத்து
காதலித்தேன்
மனதுக்குள் தினம்எண்ணி
மகிழ்ந்திருந்தேன்

கண்தூங்கும் போதும்
இதயத்தின் மடிப்புக்குள்
கக்கத்தின் கதகதப்பில்
கவனமாய் பார்த்திருந்தேன்

செங்குருதி சிறுதுணிக்கைகளின்
சீரான அஞ்சலோட்டம்மீறி
அங்கமெலாம் தினவெடுக்க
ஆவலுடன் கருத்தரித்தேன்

முன்னூறு கிராம் மூளையின்
கச்சிதமான நினைவகத்தில்
எந்நாளும் எந்நாளும்
வைத்திருந்து கருவளர்த்தேன்

பிரசவத்தேதியாய் பின்னிரவில்
வலிஎழுந்தது மனம்சுகித்தது

ஆனாலும்... ஆனாலும்...

பாவம்
பெற்றிடமுன்பே
பிணமாகிப்போனது
என் கவிக்குழந்தை.



# பதவி

ப... சித்திருந்து
ப... டித்துணர்ந்து
ப... க்குவமடைந்து.

த... னித்திருந்து
த... வமிருந்து
த... கமைபெற்று.

வி... ழித்திருந்து
வி...யர்வைசிந்தி
வி... ரும்பியுழைத்து.
பெற்றிருந்தால்
அந்தப்**பதவி**க்கே
நீதான் கௌரவம்

ப... ல்லிளித்து
ப... ந்தம்பிடித்து
ப... ணிந்துநின்று.

த... டம்புரண்டு
த... ன்மானமிழந்து
த... லைசொறிந்து.

வி... ரல்பிடித்து
வி... சிலடித்து
வி...ழுந்துவணங்கி.
பெற்றிருந்தால்
அந்தப்பதவிக்கே
நீதான் கேவலம்.






# உறவு

இதுவரை யாரும்
இருந்ததும் இல்லை

இனிமேல் எவையும்
தேவையும் இல்லை

போதும் எனக்கு
நானும்
என்கவிதைகளும்.






## சுயம்

எதனையும் என்னால்
எழுதமுடியும்

எதனாலும் என்னை
எழுதமுடியாது

என்னை நானே
எழுதியாக வேண்டும்.



# கடைசிக்கேள்வி

இந்திரியத்தால் உருவானவன்
மனிதன்
இயந்திரத்தால் உருவானது
ரோபோ

இரண்டிலும்
வேறுபாடுகளில்லை
உணர்வுகள் மரத்ததால்

ஆனாலும்...
மூன்றாம் உலகயுத்தத்தின்
அணுஆயுத விசைவில்லை
தட்டிவிடுவது
மனிதனா? ரோபோவா?

இதுதானே இவ்வுலகின்
கடைசிக்கேள்வி...



இறைவா!
உனக்கு என்
கோடானுகோடி
நன்றிகள்...

நீ தந்த ஆயுளுக்குள்
முடிந்தளவு
அனுபவிப்பேன்
முடிந்தளவு
பதிவு செய்வேன்...

காலநதியோரம்
காட்சிக்கு வைக்கப்படும்
என் கவிதைகள்
எனும் நம்பிக்கையில்..

வெளியீடு:
வர்ணம் கிரியேஷன்ஸ்